DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com

Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1494
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday November 22, 2024

# எமது ஆட்சிக் காலத்தில் இனவாதத்துக்கு இடமளிக்கமாட்டேன்

## கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி அனுரகுமார!

எமது ஆட்சிக் காலத்தில் இனவாதத்துக்கு ஒருபோதும் இடமளியேன் என 21ம் திகதி வியாழக்கிழமையன்று இலங்கைப் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற தனது கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி அனுரகுமார தெரிவித்தார்.

10 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் கன்னி அமர்வில் ஜனாதிபதி முழுமையான கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தினார். ,தன்போது உரையாற்றிய ஜனாதிபதி, ”அனைத்து ,ன மக்களும் எம்மீது நம்பிக்கை கொண்டு அதிகாரத்தை வழங்கியுள்ளார்கள். அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தலில் ஆதரவளித்த, ஆதரவளிக்காத அனைவரையும் இலங்கை பிரஜைகள் என்றே நான் கருதுவேன் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.,ந்த நாட்டில் இனி இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் இடமில்லை என்று ஜனாதிபதி கூறினார். மக்களால் வெறுக்கப்படும் நாடாளுமன்றம் மக்களை ஆள்வதற்கு தகுதியற்றது என்பதை ,லங்கையின் அரசியல்வாதிகள் மற்றும் ,னிமேல் அரசியலில் ஈடுபட உள்ளவர்கள் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்

ஆகவே மக்களால் விமர்சிக்கப்படும் பாராளுமன்றம் தோற்றம் பெற இடமளிக்க முடியாது என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். நாடாளுமன்றம் மக்களுடன் நெருக்கமாக செயற்பட வேண்டும் என்றும் ,ந்த பாராளுமன்றம் மக்களின் பரிசோதனையில் சித்தி பெற வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (தொடர்ச்சி 12ம் பக்கம்)



# தேசிய மக்கள் சக்தி முன்னைய ஆட்சியாளர்களை விட தமிழர்களை சமனான பிரஜைகளாக மதித்து ஆட்சியை நடத்தினால் அதுவே நல்ல ஆரம்பமாக அமையும்



வடக்கு தமிழர் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து வெற்றி பெற வைத்ததன் மூலம், ”இனிமேல் சிங்கள அரசுகள் தமிழர்களை புறக்கணிப்பதாக உள்நாட்டிலோ சர்வதேசத்திலோ கூற முடியாது“",““சிங்களக்கட்சி ஒன்று தமிழர்களின் நம்பிக்கையை வென்று வடக்கை கைப்பற்றியுள்ளதன் மூலம் நாட்டில் இனவாதம் இல்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது” ““தமிழர் தனி நாட்டையோ ,சமஸ்டியையோ, வடக்கு, கிழக்கு இணைப்பையோ கேட்கவில்லை. அவர்கள் கேட்பது ஒருமித்த ஊழல் மோசடியற்ற நாடு.அதனையே வடக்கு தமிழர் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து வெளிப்படுத்தியுள்ளனர்“என சிங்களத் தரப்புகளினாலும் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. இவ்வாறான மாற்றுக் கருத்துக்களை ஆரம்பத்திலேயே பரப்பும் சிங்கள ஊடகங்களை முறியடிக்கும் முகமாக பலர் செயற்பட்டு வருகின்றார்கள்.

தென்னிலங்கையில் ஆட்சியில் உள்ள அரசு தமிழ் மக்களை மதித்து ஆட்சியை நடத்தினால் அவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று முறையிட வேண்டிய அவசியம் இல்லை என்பதையும் சிலர் எடுத்துரைத்துள்ளனர்

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East (2nd Flr) Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

**CANADA UTHAYAN's 28th Cultural Festival & Dinner Gala**

**உதயன் பத்திரிகையின் 28வது ஆண்டு பல்சுவைக் கலைவிழாவும் நிதி சேர் இராப்போசன விருந்தும்**

Guest Speaker from South India, Film Director and Television Moderator Mr. Karu Palaniyappan
சிறப்பு சொற்பொழிவாளராக..திரைப்பட இயக்குனரும் தொலைகாட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளருமாகிய கரு பழனியப்பன் கலந்து கொள்கின்றார். அத்துடன் இசை, மற்றும் நடனங்கள்.

இடம்:- Kennedy Convention Centre (1199 Kennedy Road, Scarborough - Near Lawrence Ave)
காலம்:- Dec 14th, 2024 சனிக்கிழமை 6.00 PM
Tickets:- 416 732 1608 or 647 762 9512


அச்சு ஊடகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொண்டு
கனடாவில் தொடர்ச்சியாக வெளிவரும்
UTHAYAN உதயன்
உதயன் பத்திரிகையின் 28வது ஆண்டு
பல்சுவைக் கலைவிழாவும்
நிதி சேர் இராப்போசன விருந்தும் . . .
CANADA UTHAYAN's
28th Cultural Festival & Dinner Gala
Toronto Voice Of Humanity
DEC. 14th 2024
Guest Speaker from South India,
Film Director and Television Moderator
Mr. Karu Palaniyappan
சிறப்பு சொற்பொழிவாளராக, திரைப்பட இயக்குனரும்,
தொலைகாட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளருமாகிய
கரு பழனியப்பன்
கலந்து கொள்கின்றார்.
அத்துடன், இசை, மற்றும் நடனங்கள்
இடம்:
Kennedy Convention Centre
1199 Kennedy Road, Scarborough
(Near Lawrence Ave.)
காலம்:
14-12-2024 சனிக்கிழமை
நேரம்: 6:00 PM
For Tickets and Information: (416) 732-1608 or (647) 762-9512


Latika Gold House
35 Karachi Dr Unit 37, Markham ON L3S 0B5
www.latikagoldhouse.ca
COMPUTEK COLLEGE
Muraly Srinarayanathas
Chief Straegy Officer
2425 Eglinton Ave East Suite 400
Toronto, ON M1K 5G8
Tel: 416-321-9911 ext. 320
Fax: 416-775-9323
Markham Campus
7 Eastvale Dr, Suite 202
Markham, ON L3S 4N8
Tel: 905-471-3344
VIBRANT HOSPITALITY GROUP
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
K T GROUP
PRESIDENT & CEO
MR. KANA SELVA
647302 1189
KANAGAAMBIKAI PAWN BROKERS
Tel:- 416 269 7198
2633 Eglinton Ave. East, Scarborough, ON M1K 2S2
Chapel Ridge
416 840 4538
www.ctsbuildingsupplies.com
733 Progress Ave, Scarborough, On. M1H 2W7
WOODBINE ENTERTAINMENT GROUP
Thani Shanmuganathan
SANTHA
Santha
Tel: 416-200-5470
info@santha.ca
www.santha.ca
வீடு வாங்க விற்க
Raj Nadarajah
Dir: 416.333.6115
CROSSROAD
SHUTTLE BUS SERVICES
647-801-7725
AMMA PAWN BROKER
CASH FOR GOLD
BUY | SELL | INVEST
RAJEEV SEBARASHA
Dir: 905.226.8515
647-447-1562
Bala Logendralingam
RE/MAX
MAHAANS
www.babuflorist.ca
Make Someone Smile
LEGAL Think Tank
Tom Thiru
Think Tank Legal Services Corp.
Email: tom.tbond@gmail.com
வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
RE/MAX ACE
416 880 8585
1286 Kennedy Rd, Unit 3
Toronto, ON M1P 2L5
BAVAN LOGA
BAVAN TRAVEL AND TOURS
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519
RE/MAX COMMUNITY
Rajeev Koneswaran
416 568 1078
JRB universal INC.
R.R.Rajkumar
647-289-6164
Anjappar
Healthy and Traditional
N.K.S DRAPERY & BLINDS FABRIC
416.321.8420
INCOME TAX!
Selva Vettyvel
416 568 4301
905 471 4050
First Mortgage
Second Mortgage
Private Mortgage
Commercial Mortgage
Mortgage Renewals
Home Equity Line of Credit
Dir: 416-900-5636 Y. NESAN
ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600
SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE
CASH RU$$H
4049 Sheppard Ave. E
Scarborough, ON M1S 1S8
Jeya Jeyakanthan
Sales Representative
Designs 2 Prints Ltd
ALL YOUR PRINTING NEEDS
Prabagar - 647.838.2290 / 416 292 4959
Tamil One
east FM
102.7
time FM
தேசம்
உலகத்தமிழர்
GTA VIDEO ENTERTAINMENT

# உதயன் கதிரோட்டம்

## "ஊழல்வாதிகளையும்" "பொய்யர்களையும்" வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு நாடாளும் மன்றத்திற்குள் பெரும்பான்மை பலத்தோடு நுழைந்துள்ள அநுர குமார

வளங்கள் பல நிறைந்ததும் வற்றாத ஆறுகளும் நான்கு திசைகளிலும் கடல் வளமும் வன வளமும் நிறைந்த மாங்கனித் தீவாம் இலங்கையை 75 ஆண்டுகளுக்கு மேலாக மாறி மாறி ஆட்சி செய்து வந்த இனவாத முதலாளித்துவ அரசுகளும் அவற்றிக்கு துணையாக நின்று தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் வாழ்க்கையின் உச்சத்திற்கு உயர்த்திச் சென்ற தமிழ் பேசும் அரசியல்வாதிகளையும் வீட்டுக்கு (அதில் உண்மை இல்லை) அவர்களின் மாளிகைகளுக்கு என்று கூறவேண்டும்) அனுப்பிவைத்து விட்டு இன்னும் சில நாட்களில் இலங்கையின் நாடாளுமன்றம் என்னும் பாராளுமன்றத்திற்கு பெரும்பான்மைப் பலத்தோடு செல்லத் தயாரா-கும் அனைவரோடும் சேர்ந்து எமது ஆசிரிய பீடமும் புதிய அரசிற்கும் அதன் ஜனாதிபதிக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றுத.

இந்த வெற்றி என்பது சாதாரணமாக எட்டிய ஒன்றல்ல. எத்தனையோ ஆண்டு கள் காத்திருந்து எத்தனையோ உயிர்களைப் பறிகொடுத்து தியாகங்களை பல வற்றை யெய்து கைதுகளுக்கு மறைந்திருந்து. காத்திருப்புகளோடு பெற்ற ஒன்று. இலங்கையை ஆட்சி செய்த சில பத்து குடும்பங்களும் அவற்றின் உறுப்பினர்களும் தவிர்ந்து அங்கு வாழும் இலட்சக்கணக்கான மத்திய தர மற்றும் ஏழைக் குடும்பங்கள் மற்றும் தொழிலாள விவசாயக் குடும்பங்கள் அனைத்தும் இணைந்து முடித்துக் காட்டிய முத்தாய்ப்பான சாதனை இது.

நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் தனது கொள்கைப் பிரகடன உரையில் கூட ஜனாதிபதி அநுர குமார அவர்கள் தமது ஆட்சியில் இனபேதமோ அன்றி மதபேதமோ கடைப்பிடிக்கப்பட மாட்டாது என்றும் அவ்வாறு ஆட்சி நடத்துகின்றவர்கள் அரசியலுக்கு வரக் கூடாது என்பதையும் உறுதியாகத் தெரிவித்துள்ளார் என்பதை உலகமே நன்கு அறியக் கூடியதாக தெரிவித்துள்ளார்இ இன மத மொழிப் பேதமற்ற வகையில் இந்த நேரத்தில் அமைதியாக இருந்து கொண்டாடும் அனைவரும் இன்னும் சில ஆண்டுகளில் இலங்கையில் பேரி-னவாதிகளால் ஏற்படுத்தப்பெற்ற இனவாதம். மதவாதம்., வர்க்க பேதம் ஆகியவற்றை கடந்து அனைத்து இனத்தவர்களுக்கும் உள்ள பிரச்சனைகள் மற்றும் வேதனைகள் களையப்பெற்று குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மற்றும் மலையத் தொழிலாளர்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகள் அனைத்தும் தீர்க்கப்பெற்று சுபீட்சமான வாழ்வு தீவெங்கும் எங்கும் மலர நாம் பிரார்த்திப்போமாக!






Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) |
| JOURNALISTS: | Arjune |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah, |

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் – கனடா புதிய நிர்வாக சபை (2024–2025)



கனடாவில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் ஆரம்ப காலத்தில் தோன்றிய ஊர்ச் சங்கங்களில் ஒன்று எனும் பெருமையை தனதாக்கிக்கொண்ட நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் - கனடா தனது முப்பதாவது ஆண்டில் கால்பதிக்கின்றது. கனடியமண்ணிலும், ஈழத்திலும் பல சமூகப்பணிகளையும், மக்கள் நலப்பணிகளையும் ஆற்றிவரும் நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் 21வது நிர்வாக சபைக்கான தெரிவுக்கூட்டம் கடந்த ஞாயிறுக்கிழமை நவம்பர் 10, 2024 அன்று கனடா தமிழ்க்கல்லூரி மண்டபத்தில் மண்டபம் நிறைந்த ஆயுட்கால பொதுச்சபை உறுப்பினர்கள் முன்னிலையில் நடாத்தப்பட்டது.

ஏக மனதான தெரிவின் போது 6 நிறைவேற்று நிர்வாக உறுப்பினர்களும், 9 நிர்வாக உறுப்பினர்களுமாக மொத்தம் 15 பேரும், போ'கர் மற்றும் கணக்காய்வாளர் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டார்கள். நிரந்தர இயக்குனர் சபை உறுப்பினர் மூவரும் இந்த புதிய நிர்வாகத்தை வழிநடத்துவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தெரிவைத் தொடர்ந்து புதிய தலைவர் உட்பட புதிய நிர்வாகசபை உறுப்பினர்களின் முதல் உரைகள் நடைபெற்று நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுபெற்றது.

தெரிவு செய்யப்பட்ட 21வது நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, எம் நெடுந்தீவு உறவுகளுக்கும், நலன் விரும்பிகளுக்கும் அறியத் தருகிறோம்.

நீங்கள் வழங்கும் பெரும் ஆதரவை தொடர்ந்தும் புதிய நிர்வாகத்திற்கு வழங்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். நன்றி

தலைவர்
திரு. இராஜராஜன் சுப்பிரமணியம் 416-726-6317
செயலாளர்
திரு. ஜெயப்பிரகாசன்(ஜெயா) குமாரசுவாமி 647-388-3225
பொருளாளர்
திருமதி. பங்கயற்செல்வி சிவகுமாரன்
உப-தலைவர்
திரு. செல்வரவீந்திரன் தர்மலிங்கம்
உப-செயலாளர்
திருமதி. மனோகரி நாகமுத்து
உப-பொருளாளர்
திரு. சேரன் ஆறுமுகம்
நிர்வாக சபை உறுப்பினர்கள்
திரு. டொனால்ட் ஜெயரட்ணம் திரு. மரியதாஸ் மரியாம்பிள்ளை
திரு. சர்வானந்தன் காங்கேசு திரு. செல்வன் மு.ஏ
திரு. சிவா பேரம்பலம் திரு. றதன் ரவீந்திரநாதன்
திருமதி. கேதீஸ்வரி மோகன் மதி திருமதி. ஜெபா ஸ்ரீ
திருமதி. மதி கணேஷ்
போஷகர்: திரு. முருகதாஸ் அமிர்தரட்ணராஜா
கணக்காய்வாளர்: திரு. பரம் கந்தையா
இயக்குனர் சபை
திரு. பேரின்பநாதன் ஆறுமுகம் திருமதி. ஜேம்ஸ் சரஸ்வதி
திரு. ஈசன் குலசேகரம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் இனத்தின் மானம் காத்த மட்டக்களப்பு மாவட்ட மண்

- யாழ்ப்பாணத்திலிருந்து ந.லோகதயாளன்



தமிழரின் இருப்பு, தாயகம், தேசியம், சுயநிர்ணயம், என்பதெல்லாம் இன்னமும. வெற்றுக் கோசம் அல்ல என்ற மானத்தை மட்டக்களப்பு மாவட்ட மண் காத்து தமிழர்களிற்கு வழங்கியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்று முடிந்த 10வது நாடாளுமன்றத் தேர்தலில் அநுராவின் அலையில் நாடு முழுவதும் அள்ளுப்பட்டுச் சென்றிருந்தாலும் மட்டு மண் தன் இருப்பை நிலை நிறுத்தியுள்ளது. அதேநேரம் தென் இலங்கையைப் பொறுத்த மட்டில் அது கட்சி மாற்றமாகவும் தமிழர. பிரதேசங்களிலேயே இன மாற்றமாகவும் அமைந்துள்ளது.

இதேநேரம் வடக்கு கிழக்கில் இருந்த 20 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 ஆக குறைவடைந்துள்ளது. ஒரு ஆசணம் மாவட்ட எண்ணிக்கையில் குறைவடைந்த்தோடு 4 ஆசனம் தமிழ் கட்சிகளின் சார்பில் இழக்கப்பட்டது மட்டுமன்றி தமிழ் கட்சிகளின் தேர்தல் வரலாற்றையே புரட்டிப்போட்ட சம்பவங்கள் மட்டுமன்றி பல வரலாற்றுச் சாதனைகளும் முறியணிக்கப்பட்டுள்ளது.

இதில் வடக்கு கிழக்கில் 1989 ஆம் ஆண்டு முதல் ஆயுதக் குழுக்களிற்கு அல்லது அவர்கள் கை காட்டுபவர்களிற்குத்தான் என்ற வரலாறு முழுமையாக இல்லாதாக்கப்பட்டுவிட்டது. இதேபோன்று 2004 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆசீர்வாதத்துடன் வடக்கு கிழக்கில் கூட்டமைப்பு 22 ஆசணங்களைக் கைப்பற்றியபோதும்கூட ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா தோற்கடிக்கப்பட முடியாதவர் என்ற பட்டியலில் இடம்பிடித்திருந்த நிலையில் 10வது நாடாளுமன்றில் 20 ஆயிரம் வாக்கினைக்கூட பெற முடியாத அளவிற்கு தோல்வியுறச் செய்யப்பட்டார்.

2020 ஆம் ஆண்டு உடுப்பிட்டித் தொகுதியை அரச கட்சியில் போட்டியிட்டு வெற்றியடைந்த அங்கஜன் இராமநாதன் கைப்பற்றியது மட்டுமன்றி தலைவர் பிரபாகரனின் கோட்டையைக் கைப்பற்றினேன் என அறிக்கையிட்டார். அது இம்முறை தகர்கப்பட்டது மட்டுமன்றி அவரது கட்சி யாழ்ப்பாணத்தில் கட்டுப் பணத்தையும் இழந்தது.

இதேபோன்று ஆசன ஒதுக்கீடு அல்லது இடப் பங்கீடுகள் காரணமாக வெளியேறி அவசர அவசரதாக கூட்டு அமைத்த அத்தனை கட்சிகள், சுயேச்சைக் குழுக்களும் தோல்வியுற்ளனர். இதில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களும் உள் அடக்கம். இவை அனைத்திற்கும் அப்பால் ஓர் சுயேட்சைக் குழுவும் ஆசனம் எடுக்கும் என்ற நிலயும் 35 ஆண்டுகளின் பின்பு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ளது.

இவை போன்று ரெலோவின் தலைவர் 6 ஆயிரத்திற்கும் உட்பட்ட வாக்கினைப் பெற்று வெற்றியீட்டியதனைத் தவிர எந்தவொரு ஆயுதக் குழு உறுப்பினர்களும் வெற்றிகொள்ள முடியவில்லை. இவை அனைத்தையும் கூறுவது போன்று தென்னிலங்கை அரசியல் கட்சி ஒன்று யாழ்ப்பாணத்தில் இரு ஆசணங்களைப் பெறுவது அல்பிரட் துரையப்பாவின் காலத்திற்கு பின்பு தற்போது தேசய மக்கள் சக்தி 3 ஆசணங்களைப் பெற்றுள்ளது.

அகல இலங்கைத் தமிழ் காங்கிரஸ் 2020ஆம் ஆண்டு மாவட்டத்தில் நேரடியாக ஒரு ஆசணத்தையும் தேசிய பட்டியலில் ஒரு ஆசனமுமாக இரு ஆசனத்தைப் பெற்றபோதும் இம்முறை கடும் முயற்சியில் ஒரு ஆசனத்தைப் பெற்று மானத்தைக் காத்துக்கொண்டது.

எல்லாக் கட்சியினையும் கூறியும் தமிழ் அரசுக் கட்சியை காணவில்லை என எண்ண வேண்டாம். தமிழ் அரசுக் கட்சியில் பலம் மற்றும் பலவீனமாக கருதப்பட்ட எம்.ஏ.சுமந்திரனே அதிக விமர்சனத்திற்கும், சர்ச்சைக்கும் அகப்பட்டதோடு பலரின் பார்வையிலும் அகப்பட்டு விரிக்கப்பட்ட வலையில் வகையாக மாட்டிக்கொண்டார். அதனால் 15 ஆயிரத்தை தொட்ட வாக்கை பெற்றபோதும் தனது நாடாளுமன்ற உறுப்பினர் சந்தர்ப்பத்தை இழந்தது மட்டுமன்றி மாவட்டத்தின் தோல்விக்கும் காரணம் என்ற அவப் பெயருக்கும் ஆளாக்கப்பட்டார். ஏனெனல் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவானது சுமந்திரனின் எண்ணத்தில் உருவானது என்ற பெரும் விமர்சணத்திற்கும் ஆளாகியிருந்தார்.

இருந்தபோதும் கிழக்கின் 3 மாவட்டத்தில் 5 ஆசணத்தைப் பெற்ற தமிழ் அரசுக் கட்சியால் வடக்கில் இரண்டு ஆசணத்தை மட்டுமே பெற்றதோடு தேசிய பட்டியலில் ஒரு ஆசணத்தையும் பெற்றுக்கொண்டது. இந்தனை நெருக்கடிகள், விமர்சனங்கள் உள்ளபோதும் ஒரு சாதனையினையும் தமிழ் அரசுக் கட்சி நாட்டியுள்ளது. அதாவது சென்றமுறை தேசிய பட்டியலுடன் 6 ஆசணங்களை மட்டுமே கொண்டிருந்த தமிழ் அரசுக் கட்சி வடக்கில் பின்னடைவை சந்தித்தபோதும் தேசிய ரீதியில் 8 ஆசணங்களைப் பெற்று நாடளாவிய ரீதியில் 3 வது பெரிய கட்சி என்ற இருப்பைத் தக்க வைத்துள்ளது.

இவை அனைத்திற்கும் மத்தியில் தமிழ் அரசுக் கட்சி அல்லாத கட்சிகள் மீது உள்ள பல குற்றச் சாட்டுக்களில் முக்கிய குற்றச் சாட்டு தமிழ் அரசுக் கட்சி அல்லது சுமந்திரன் கூடாது எனப் பிரிந்து சென்றவர்கள்கூட ஒற்றுமையாக போட்டியிட முடியாமல் நான்கு அணிகளாக பிரிந்து சென்றதும் தமிழ் அரசுக் கட்சி விட்ட தவறுதானா என்பதற்கு பதில் அளிப்பது பெரும் கடினமாகவே உள்ளது.

# பசுமை அரசியலை வீறுடன் முன்னெடுக்கும் உத்வேகத்தை இத்தேர்தல் எமக்கு வழங்கியிருக்கிறது

## பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு



பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சை அணியாகப் போட்டியிட்ட நாம் பாராளுமன்ற ஆசனத்தை வெல்ல முடியாதபோதும் மக்கள் எமக்குக் கணிசமான வாக்குகளை வழங்கியிருக்கிறார்கள். படைபலம், பணபலம், பன்னாட்டு நிறுவனங்களின் பின்புலம் எதுவுமில்லாத சாமானியர்களின் கட்சியான எமக்குத் தென்னிலங்கை அரசியற் சூறாவளி இங்கு ஏற்படுத்தியிருக்கும் அலைகளின் மத்தியிலும் மக்கள் 7,496 வாக்குகளை வழங்கியிருக்கிறார்கள். இது தமிழ்த்தேசியத்தில் பசுமை அரசியலை வீறுடன் முன்னெடுக்கும் உத்வேகத்தை எமக்கு வழங்கியிருக்கிறது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், சனநாயகத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாக மாம்பழம் சின்னத்தில் போட்டியிட்டிருந்தது. இத்தேர்தல் முடிவுகள் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் சுயேச்சையாகத் தேர்தலை எதிர்கொண்டபோதும், தேர்தல்களின்போது மாத்திரம் தோன்றி மறையும் மழைக் காளான் சுயேச்சைகள் அல்லர் நாம். மாறாக, நாம் இந்த மண்ணில் நிலையாகக் காலூன்றிச் சமூக, அரசியற் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற ஓர் பசுமைக் கட்சி ஆகும். உலக நாடுகளில் சூழல்சார் அரசியல் காத்திரமான முடிவுகளை மேற்கொள்ளும் வகையில் பசுமைக் கட்சிகள் உருவாகி, பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவங்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால், பேரினவாதம் கோலோச்சும் இலங்கையில் சூழலியல் வாதம் இன்னமும் கண்டுகொள்ளப்படாமலேயே உள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தேசியத்தையும் சூழலியத்தையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத கோட்பாடுகளாகக் கருதியே பயணித்து வருகின்றது. தமிழ்த்தேசியம் பேசும் கட்சிகளில் சில அணிந்திருக்கும் போலித்தேசிய முகமூடிகளும், கட்சிகளின் உள்ளே நிலவும் எதேச்சாதிகாரமும் ஜனநாயக மறுப்பும், அவற்றின் சூழலியம் பற்றிய ஆழமான புரிந்துணர்வின்மையும் எம்மைத் தனிவழி பயணிக்க வைத்திருக்கிறது. எனினும், உண்மையான தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ்த்தேசியவாதிகள் ஒருங்கிணைந்து பயணிக்க வேண்டியதன் அவசியத்தையும் நாம் தொடர்ந்து வலியுறுத்தியே வந்துள்ளோம்.

பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் தமிழ்த்தேசியவாதிகளின் ஒற்றுமையை வலியுறுத்துவனவாகவே அமைந்துள்ளன. உண்மையான தமிழ்த்தேசியவாதிகள் ஒவ்வொருவரும் அடுத்தவரது சுயத்தை அங்கீகரித்தவாறு, ஒருவரில் இன்னொருவர் ஏறிச் சவாரிக்கும் கபட நோக்கு இல்லாது இதய சுத்தியுடன் ஒரு குடையின்கீழ் பயணிப்பதற்கு முன்வரவேண்டும். தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் இம்முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கும். பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவானவர்களுக்கு எமது வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, எம்மை வெற்றிபெற வைக்கவேண்டும் என்று கடுமையாக உழைத்த அனைவருக்கும் எமது நன்றிகளையும் தெரிவித்தார்.

# மிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பாராளுமன்றத்தில் ஒரே அணியாக பிரச்சினைகளை கையாள உள்ளேன்

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்




(16-11-2024)

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றிணைந்து பாராளுமன்றத்தில் ஒரே அணியாக பொது பிரச்சனைகளை நாங்கள் கையாளுகின்ற வகையிலே செயல்பட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நவம்பர் 16ம் திகதியன்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இனப்பிரச்சினை குறித்தும், அபிவிருத்தி தொடர்பாகவும் கூடிய கவனம் செலுத்துவதாக கோரி மக்களிடம் நாங்கள் வாக்கு சேகரித்தோம்.குறித்த இரு விடையங்கள் குறித்து அரசாங்கத்துடன் சேர்ந்து செயல்படுகின்ற ஒரு சாத்தியப்பாட்டை மேற்கொள்கின்ற சூழலை உருவாக்குவதாகவும் நாங்கள் கூறியிருந்தோம்.

குறித்த இரு விடையங்களிலும் நாங்கள் கவனம் செலுத்துவோம். கிராமிய ரீதியாக மக்களின் குறைகளை கேட்டறிந்து கிராமங்களை முன்னேற்றுவதே நோக்கமாக இருக்கும்.மேலும் இனப்பிரச்சினை தொடர்பான விடையங்களை நாங்கள் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுவதற்கான ஒரு சூழலை நாங்கள் உருவாக்குவோம்.

மேலும் இம்முறை பாராளுமன்ற தேர்தலின் போது தெரிவு செய்யப்பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து பாராளுமன்றத்தில் ஒரே அணியாக பொது பிரச்சனைகளை நாங்கள் கையாளுகின்ற வகையிலே செயல்பட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளேன்.

ஜனாதிபதி கூறியது போல் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து, காணாமல் போனவர்கள் குறித்து அவர்களின் உறவுகள் போராட்டத்தின் ஊடாக நீதியை கோரி வருகின்றனர்.

அவர்களுக்கு நியாயம் கிடைக்கின்ற வகையில் ஒரு வழி முறையை நாங்கள் கையாளுகின்ற ஒரு சூழலை உருவாக்குதல்,எமது நிலங்கள் பரிபோகாத ஒரு சூழலை ஏற்படுத்துதல், எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளோம்.

எனவே இம்முறை சங்கு சின்னத்துக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றிகள். மக்கள் சார்ந்த பிரச்சினைகளை கவனத்தில் எடுத்து, மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முறையை நாங்கள் கையாளுவோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# புதிய அமைச்சரவையில் 19 பெரும்பான்மையின அமைச்சர்களும் 6 தமிழ் பேசும் அமைச்சர்களுமே இனவிகிதாசாரத்தில் நியமிக்கப்பட வேண்டும்

## முன்னாள் கிழக்கு மாகாண உறுப்பினர் இரா. துரைரெத்தினம் வேண்டுகோள்

புதிதாக ஆட்சி அமைத்துள்ள அரசு விகிதாசார அடிப்படையில் 19 பெரும்பான்மையின அமைச்சர்களையும் 6 தமிழ் பேசும் அமைச்சர்களையும் தனது அமைச்சரவையில் நியமித்து செய்யப்படவேண்டும் இவ்வாறு விகிதாசார அடிப்படையில் இந்த அமைச்சுக்களை நியமிக்காவிடின் எவ்வாறு இவர்கள் நல்லாட்சியை அமுல்படுத்துவார்கள் என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது எனவே சிறுபான்மையினரையும் அமைச்சுக்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் கிழக்கு மாகாண உறுப்பினர் இரா. துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள ஈபி.ஆர்.எல்.எப் கட்சி காரியாலயத்தில் 18-11-2024 அன்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய அரசு மக்களின் ஆணையை பெற்று பல சகாப்தங்களுக்கு பின்னர் கூடுதலாக ஊழலுக்கு எதிராக மாற்றத்தை விரும்பியவர்கள் வாக்களித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நல்ல கொள்கைகளையுள்ள நல்லாட்சி அரசு ஆட்சிய அமைக்க போகின்ற நிலையில் சிறுபான்மையினர் பாதிக்கப்படமால் இருக்க வேண்டுமாயின் விகிதாசார அடிப்படையில் அமைச்சர்களை நியமிக்கப்படவேண்டும் அது தவறும் பட்சத்தில் அவர்கள் எவ்வாறு நல்லாட்சியை அமுல்படுத்துவார்கள் என்ற சந்தேகம் மக்களுக்கு மத்தியில் தொற்றி நிற்கும் எனவே நல்ல கொள்கைகளை முன்வைக்கின்ற அடிப்படையில் இந்த புதிய அரசு 25 அமைச்சரவையில் இன விகிதாரத்தின் அடிப்படையில் 19 சிங்கள அமைச்சர்களும் 6 தமிழ் அமைச்சர்களும் தெரிவு செய்யப்படவேண்டும்.

நாட்டில் 9 சதவீதமாக உள்ள விசேட தேவையுடைய சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை பல சதாப்தங்களுக்கு பிறகு இந்த அரசு நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டதை கரம்கூப்பி வாழ்த்துகின்றேன் அதேவேளை நல்ல ஒரு செயற்பாடுகளை அரசு மேற்கொண்டுள்ளது.

இந்த 9 வீதமான விசேட தேவையுள்ளவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவாக அரசாங்கத்தால் வழங்கப்பட்டுவரும் 7 ஆயிரத்து 500 ரூபா அவர்களின் வாழ்வாதாரத்துக்கு போதுமானது அல்ல.

அதேவேளை வடக்கு கிழக்கில் போராட்டத்தில் சம்மந்தப்பட்டு பல போராளிகள் வலுவிழந்துள்ளதுடன் விசேட தேவையுள்ள பலர் பெரும் பொருளாதார கஸ்டத்தில் வாழ்ந்து வருகின்றனர் எனவே வழங்கப்பட்டுவரும் இந்த மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்பட்டுவரும் இந்த 7500ரூபா நிதியை புதிய வரவு செலவு திட்டத்தில் 20 ஆயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

மாகாணசபை நிதியும் மத்திய அரசாங்க நிதியுமாக வருடா வருடம் 4 ஆயிரம் கோடி ரூபா இந்த அரசாங்க நிர்வாகத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அனுப்பப்படுவது வழமையானது அத்துடன் ஏனைய மாவட்ட அமைச்சுக்கள் ஊடாக மேலதிகமாக 5 ஆயிரம் கோடிக்கு மேல் ஒதுக்கப்படுகின்றது இவ்வாறு மாவட்டத்துக்கு சுமார் 9 ஆயிரம் கோடி ரூபா நிதி ஊடாக ஒதுக்கப்படும் எனவே மாவட்டதில் நான்கு தமிழ் பிரதிநிதிகளுக்கு வாக்களித்து ஆணை வழங்கியுள்ளனர்.

அது மட்டுமல்ல கல்முனை பிரதேச செயலக தரமுயர்த்தல் மயிலத்தமடு மாதவனை மேச்சல் தரைவிவகாரம் குசனார்மலை மற்றும் வாகரையில் கணியமண் அகழ்வு மற்றும் இயற்கை வளங்களை அழிப்பது தொடர்பான விடையங்களை தொடர்பாக புதிய திட்டங்களையும்.




குடும்பங்களை தலைமை தாங்கும் 23 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் அதேபோன்று 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட வயோதிபர்கள் உள்ளனர் இவர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்க வைப்பதற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரும் வரவு செலவு திட்டத்தில் கருத்துக்களை முன்வைக்கவேண்டும்.

அதேவேளை 13வது திருத்தசட்டத்தினை செயற்படுத்தப்படவேண்டும் மாகாணசபை தேர்தலை நடாத்தவேண்டும். ஒருவரை வாக்களித்து வெல்ல வைப்பதற்கும் ஒருவரை வாக்களித்து தோற்க வைப்பதற்குமான உரிமை அந்த உரிமைகளை நாங்கள் ஜனநாயக ரீதியாக ஏற்றுக் கொள்கின்றோம்.

எனவே எங்களை பொறுத்தமட்டில் நாங்கள் இந்த சமூகத்திற்கு முழுமையாக பல சகாப்தங்களாக செற்பட்டுவருகின்றோம் அந்த அர்ப்பணிப்பு செயற்பாடுகளை நாங்கள் தொடர்ச்சியாக நாடாளுமன்றம், உள்ளூராட்சி, மாகாணசபை தேர்தலாக இருக்கலாம் தோற்றாலும் சரி வென்றாலும் சரி நாங்கள் வென்றால் அதிகாரத்துடன் செய்வதற்கு மக்கள் ஆனையை தந்திருக்கின்றனர் ஆனால் தோற்கும் பட்சத்தில் சமூகத்திற்கு சேவை செய்வதற்கு சந்தர்ப்பங்களை உருவாக்கி கொள்வோம் எனவெ யாரும் எங்களை தட்டிப்பறித்துவிட முடியாது என்றார்.



கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் தற்பொழுது அறவிடப்பட்டு வரும் பொருட்கள் சேவைகள் வரியிலிருந்து குறிப்பிட்ட காலத்திற்கு விலக்கு அளிக்கப்பட உள்ளது?



கனடாவில் தற்பொழுது அறவீடு செய்யப்பட்டு வரும் பொருட்கள் சேவைகள் வரி குறிப்பிட்ட காலத்திற்கு விலக்கு அளிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஆளும் லிபரல் கட்சியும் என்.டி.பி கட்சியும் இது தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி எதிர்வரும் புத்தாண்டு, நத்தார் பண்டிகையை காலப்பகுதியில் கனடிய நுகர்வோருக்கு இந்த சலுகை வழங்கப்பட உள்ளது.

சுமார் இரண்டு மாத காலத்திற்கு இவ்வாறு வரி சலுகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற ஏதுக்களினால் சிரமங்களை எதிர்நோக்கி வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சில வகைப் பொருட்களுக்கு இந்த வரி விலக்கு அறிவிக்கப்பட உள்ளது.

பியர், வைன், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்களுக்கு இவ்வாறு வரிச் சலுகை வழங்கப்பட உள்ளது.

உலக செய்திகள்
World News

# அவுஸ்திரேலியாவின் சிட்னியில் கம்பர்லேண்ட் நகர சபையில் "தமிழர் மரபுரிமை வாரம்" பிரகடனம்

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

சிட்னியில் கம்பர்லேண்ட் நகர சபை எதிர்வரும் 2025 ஜனவரி 13 முதல் 19 வரை "தமிழர் மரபுரிமை வாரமாக" குறிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

இத் தீர்மானத்திற்கான பிரேரணை கவுன்சிலர் சுஜன் செல்வனால் முன்மொழியப்பட்டது. பிரேரணைக்கு கவுன்சிலர் சுமன் சாஹா அவர்களால் ஆதரிக்கப்பட்டதுடன் நகர மேயர் கவுன்சிலர் ஓலா ஹமேட் மற்றும் மற்ற அனைத்து கவுன்சிலர்களால் ஆதரிக்கப்பட்டதும் குறிபபிடத்தக்கது.

அவுஸ்திரேலியாவில் தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கம்பர்லேண்ட் நகர சபை அங்கீகரித்ததை சிட்னி வாழ் தமிழ் சமூகம் பெரிதும் பாராட்டியுள்ளது. அவுஸ்திரேலிய மண்ணில் முதல் முறையாக Cumberland City Council என்ற உள்ளூராட்சி சபை, அடுத்த வருடம், 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் தேதி முதல் 19ஆம் தேதி உள்ளிட்ட வாரத்தை "தமிழர் மரபுரிமை வாரம்" (Tamil Heritage Week) என அறிவித்துள்ளமை புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு பெரும் உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

புலம் பெயர் மண்ணில் எமது தாய் மொழியாகிய தமிழ் மொழியும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம். இதற்கு அங்கீகாரமாக தற்போது சிட்னியில் "தமிழர் மரபுரிமை வாரம்" பிரகடனம் வெளிவந்துள்ளது.

அதே போன்று பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் என்றென்றும் மதிக்கப்பட வேண்டியவை. தமிழ்மொழி போன்ற உலகின் மூத்த மொழி நிச்சயம் பாதுகாக்கப்பட்டே ஆக வேண்டும். அதனைப் பாதுகாப்பதற்கான வளமும், வலிமையும் இன்றைய சந்ததியுனரிலேயே தங்கியுள்ளது.

இன்றைய உலகம் பல சவால்கள் நிறைந்ததாக உள்ளது. எமது தலைமுறையில் நாம் எதிர்கொண்ட சவால்களை விடவும் அதிக சவால்களை தற்போதைய தலைமுறை எதிர்கொள்கின்றது. சவால்களை சிறப்பாக எதிர்கொள்பவர்களே வாழ்க்கையில் வெற்றிகரமான மனிதர்களாக விளங்க முடியும்.

இன்று நாம் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்ள தமிழ்மொழி அறிவு இன்றைய தலைமுறைக்கு அல்லது அடுத்துவரும் தலைமுறைக்கு அவசியமாக "தமிழர் மரபுரிமை வாரம்" பிரகடனம் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றாக விளங்கும் தமிழ் மொழி, பல நூற்றாண்டுகளாக, பல்வேறு போர்களையும், பிறமொழித் தாக்குதல்களையும் எதிர்கொண்டு, சமாளித்து நின்று நிலைத்த எம் தாய் மொழி தொடர்ந்தும் அவ்வாறு நிலை கொள்ள வேண்டுமாயின், புலம் பெயர் மண்ணிலும் நிலைத்து நிற்க பெரும் பணிகள் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

கம்பர்லாந்து நகர சபை தமிழர் கலை கலாச்சார பண்பாட்டை கொண்டாடுவதற்காக அடுத்த ஆண்டு தைப்பொங்கல் நாளை ஜனவரி 13-19 வரையான நாட்களை தமிழர் மரபுரிமை வாரம் என பிரகடனப்படுத்தியுள்ளமை இங்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்த பெரும் அங்கீகாரமாகும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடமாகாண மக்கள் இனவாதத்தைப் புறந்தள்ளி தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தமைக்கு விசேட நன்றி என பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவிப்பு



வடமாகாண மக்கள் பொய்ப் பிரசாரங்களுக்கு ஏமாறாது, இனவாதத்தைப் புறந்தள்ளி எமக்கு வாக்களித்தமைக்கு விசேடமாக நன்றி தெரிவிப்பதாக தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா (Tilvin Silva) தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் 15ம் திகதி வெள்ளிக்கிழமை அன்றைய தினம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், விகிதாசாரத் தேர்தலின் கீழ் தேசிய மக்கள் சக்தி வரலாற்று வெற்றியை பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் அரசியல் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும், வெற்றிக்காகத் தியாகம் செய்தவர்களுக்கு அனைவருக்கும் நன்றிகள். விசேடமாக பொய்ப் பிரசாரங்களுக்கு ஏமாறாத வடமாகாண மக்கள், இனவாதத்தைப் புறந்தள்ளி எமக்கு வாக்களித்தமைக்கு நன்றிகளை தெரவித்துக்கொள்கிறேன். அத்துடன் இலங்கை வரலாற்றில் முதலாளித்துவ போக்குக் கொண்ட ஊழல் அரசியல்வாதிகளை புறந்தள்ளி மக்கள் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பு வழங்கிய இலங்கை மக்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் இந்த கருத்துக்களையே தமது ஜனாதிபதி அநுரகுமாரவும் கொண்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றத்திற்கு தெரிவான 8 மலையகத் தமிழர்கள்

## தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் ராமலிங்கம் சந்திரசேகரனும் இணைக்கப்பட்டுள்ளார்



நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் மலையகத் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தி 8 உறுப்பினர்கள் இம்முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

இலங்கையின் 10வது நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் கடந்த 14ஆம் திகதி இடம்பெற்றது.

160 நாடாளுமன்றத் தொகுதிகளில் இருந்து 196 பேர் நேரடியாகவும் 29 பேர் தேசியப் பட்டியல் ஊடாகவும் நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட உள்ளதுடன், 17.1 மில்லியன் மக்கள் இம்முறை வாக்களிக்க தகுதிபெற்றிருந்தனர்.



இந்நிலையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நுவரெலியா (Nuwara Eliya), பதுளை (Badulla), இரத்தினபுரி (Ratnapura) ஆகிய மாவட்டங்களில் இருந்து ஏழு மலையகத் தமிழர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட கிஷ்ணன் கலைச்செல்வி 33346 வாக்குளை பெற்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்ப்பில் ஜீவன் தொண்டமான் 46,438 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பழனி திகாம்பரம் 48018 வாக்குளை பெற்றும், வே.இராதாகிருஷ்ணன் 42,273 வாக்குகளை பெற்றும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட கிட்ணன் செல்வராஜ் 60041 வாக்குளை பெற்றும் அம்பிகா சாமுவேல் 58201 வாக்குகளை பெற்றும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

அதுபோன்று இரத்தினபுரி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட சுந்தரலிங்கம் பிரதீப்பும், மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்ட சரோஜா போல்ராஜும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

தேவேளை, தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசியப் பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள ராமலிங்கம் சந்திரசேகரனும் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகினால் மொத்தமாக 8 மலையக எம்.பிகள் இம்முறை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஐக்கிய மக்கள் சக்தியின் நல்லூர் தொகுதி அமைப்பாளர் உயிரிழப்பு!



ஐக்கிய மக்கள் சக்தியின் நல்லூர் தொகுதி அமைப்பாளரான அழகரத்தினம் கிருபா (வயது 43) அவர்கள் 19-11-2024 அன்றையதினம் உயிரிழந்துள்ளார்.

அவர் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளராக போட்டியிட்டார். தேர்தல் பிரச்சார காலங்களில் அவர் திடீர் சுகவீனம் அடைந்து சுயநினைவற்ற நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் 19ம் திகதி அன்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

அவர் ஒரு தொழிலதிபராக இருந்துவந்த நிலையில் பல வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளையும், வேறு பல உதவிகளையும் வழங்கி அவர்களது குடும்ப வறுமையை போக்கி பல சேவைகளை புரிந்தமை குறிப்பிடத்தக்கது.

# தெற்கைத் தளமாகக் கொண்ட கட்சி ஒன்றிற்கு வட பகுதி மக்கள் இவ்வளவு முதன்மையாக வாக்களித்துள்ளதை தேவையான "மாற்றம்" என குறிப்பிட்ட இலங்கைக்கான சீனத் தூதுவர்

## யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு தெரிவிப்பு

**- ந.லோகதயாளன்**




வடக்கு மாகாணத்தில் வாழுகின்ற எம் சகோதர சகோதரிகளின் வாழ்வியல் முறை எவ்வாறு உள்ளது என்பதை அறிந்து கொள்வதே எனது வருகையின் நோக்கமாகும். தேசிய மக்கள் சக்தியின் வரலாற்றிலேயே தெற்கை மையப்படுத்திய கட்சி ஒன்றிற்கு முதன் முதலாக வடக்கு மக்கள் இவ்வளவு முதன்மையாக வாக்களித்துள்ளனர் என இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூ சென்கொங் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் 18-11-2024 அன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீனத் தூதுவர் இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், நான் பருத்தித்துறை முனைக்கு சென்றிருந்தேன். அங்கு ஓர் வாக்கியம் எழுதப்பட்டிருந்தது. பண்மைத்துவத்தில் ஒற்றுமையினை நிலைநாட்டுதல் என எழுதப்பட்டது. கடந்த நடாளுமன்ற தேர்தலில் அது இயல்பாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது.




யாழ்பாணத்தில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ள நிலையில் நான் இங்கே வருகை தந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நான் கொவிட்-19 காலப்பகுதியில் தான் முதன் முதலாக வடக்கிற்கு வருகை தந்தேன். அப்பொழுது இருந்த அரசாங்கத்தினை முழுமையாக சினோபாம் தடுப்பூசியினை வழங்குமாறு வலியுறுத்தினோம். வடக்கு கிழக்கில் 1.5 பில்லியன் ரூபாய் செலவில் நீர் சுத்திகரிப்பு கருவிகள், கடல் தொழிலாளர்களுக்கான வலை, உலர் உணவு பொதி, அரிசி ஆகிய திட்டங்களிற்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். மேலும் மீன்பிடிவலை வீட்டு திட்டங்கள் வழங்க ஆரம்பிக்கழட்டுள்ளன ஏனைய திட்டங்கள் நிறைவடைந்துள்ளன.

இதனடிப்படையில் 1 லட்சத்து 20 ஆயிரத்து எழுநூற்று 60 குடுமங்களுக்கு 1630 மெற்றிக் தொன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. 75 ஆயிரம் வலைகள் 14 ஆயிரத்து 936 கடற்றொழிலாளர்களுக்கும், 500 குடும்பங்களுக்கு 500 வீடுகளும் வழங்கப்பட்டுவருகின்றது.

இலங்கை சீனாவிடையே பாரம்பரிய நட்பு உள்ளது இதன் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் எடுக்கும் அனைத்து தீர்மானங்களுக்கும் சீனா இலங்கையுடன் இருக்கும் என்றார் சீனத்தூதுவர்.



# நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் 2024: தேசத்தைத் திரட்டாமல் கட்சிகளை மட்டும் திரட்டமுடியாது

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**தே**ர்தல் முடிவுகள் ஒரு விடயத்தை மிகத்தெளிவாக உணர்த்துகின்றன. ஒற்றுமை இல்லையேல் எதிர்காலம் இல்லை என்பதுதான் அது.

தமிழ்க் கட்சிகள் ஏதாவது ஒரு தந்திரோபாய ஐக்கியத்திற்குப் போயிருந்திருந்தால் வாக்குகள் சிதறாமல் கூட்டிக்கட்டப்பட்டிருக்கும். பெரும்பாலான சுயேச்சைகள் களமிறங்கியிருக்காது. அர்ஜுனாவைப் போன்றவர்கள் நாடாளுமன்றம் செல்லும் ஒரு நிலைமை தோன்றியிருக்காது.

ஆனால் தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு இடையே ஐக்கியப்படவில்லை. கட்சிகளை அவ்வாறு ஐக்கியப்படுத்துவதற்கு கட்சிகளைக் கடந்து சிந்திக்கின்ற பெருந்தலைமைகள் அரங்கில் இல்லை. மக்கள் அமைப்புகளும் அரங்கில் இல்லை. ஜனாதிபதித் தேர்தலின் போது கட்சி கடந்து மக்களைத் திரட்ட முன் வந்த அமைப்புக்கள் நாடாளுமன்றத் தேர்தலை கையாள்வதற்கு தயாராக இருக்கவில்லை. இதனால் ஒன்று திரட்டப்படாத கட்சிகள் சிதறி நின்று வாக்கு கேட்டன. ஒரே கட்சிக்குள்ளேயே, ஒரே சுயேச்சைக்குள்ளேயே விருப்பு வாக்குப் போட்டி நிலவியது. மிகப்பெரிய கூட்டங்களை கட்சிகள் ஒழுங்குபடுத்தாமைக்கு அதுவும் ஒரு காரணம்.

வாக்காளர்களின் கவனம் சிதறடிக்கப்பட்டது, நம்பிக்கை சிதறடிக்கப்பட்டது, வேட்ப்பாளர்கள் தமது போட்டியாளரை வில்லனாக, துரோகியாக, அயோக்கியனாக உருவகித்தார்கள். தமிழ்த் தேசிய நிலைபாட்டைக் கொண்டிராத கட்சிகளின் வேட்ப்பாளர்களை அவ்வாறு விமர்சிப்பது வேறு. ஆனால் தமிழ்த் தேசியப் பரப்புக்குள்ளேயே கட்சிகளும் சுயேச்சைகளும் ஒன்று மற்றதைப் பிடித்துத் தின்றன.

சுமந்திரன் தனது எதிரிகளை பார் பெர்மிட் வாங்கியவர்கள் என்றும் அரசு தரப்புடன் கள்ள உறவு பேணுகின்றவர்கள் என்று விமர்சித்தார். சிறீதரன் அணி சுமந்திரன் தேசிய நீக்கம் செய்பவர் என்று சித்தரித்தது. சங்குக் கூட்டணியை தமிழரசுக் கட்சியும் ஏனைய கட்சிகளும் ஒட்டுக் குழுக்கள் என்று சிறுமைப்படுத்தின. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏனைய எல்லாக் கட்சிகளையும் துரோகிகள், காட்டிக் கொடுப்பவர்கள், இந்தியாவின் முகவர்கள், என்று பட்டம் சூட்டியது. செல்வராஜா கஜேந்திரன் ஒரு காணொளியில் பேசுகிறார், தாங்கள் மட்டும்தான் சாவதற்கு தயாரான கட்சி என்று. சாகத் தயாராக இருப்பதை ஒரு தகுதியாக அவர் கூறுகிறார். ஆனால் அவர்கள் சாகத் தயார் என்பதை கடந்த 15 ஆண்டுகளில் அவர்களில் யாருமே நிரூபித்திருக்கவில்லை. சாகத் தயாராக இருப்பதை யாராவது ஒருவர் செத்துத் தான் நிரூபிக்கலாம். தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்குள் இதுவரை யாரும் அவ்வாறு கொல்லப்படவில்லை, தீக்குளிக்கவும் இல்லை.

இவ்வாறு ஒவ்வொரு கட்சியும் ஏனைய கட்சிகளை வாக்காளர்கள் மத்தியில் சிறுமைப்படுத்தி, மதிப்பிறக்கம் செய்யும் நோக்கத்தோடு முன்னெடுத்த பிரச்சாரங்கள் மக்களை மேலும் குழப்பின. யார் சொல்வது சரி? யாரை நம்புவது? யாரை ஆதரிப்பது? என்ற குழப்பம் வாக்காளர்களில் ஒரு பகுதியினரைத் தொற்றிக் கொண்டது. அதனால் வாக்காளர்கள் சலிப்படைந்தார்கள், வெறுப்படைந்தார்கள். இந்தக் கட்சிகளுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்று ஒரு பகுதியினர் தீர்மானித்தார்கள். மாற்றத்திற்கு வாக்களிக்கலாம் என்று இன்னொரு பகுதியினர் தீர்மானித்தார்கள். இதனால் தமிழ் வாக்குகள் சிதறின.

தேர்தல் முடிவுகளைத் தொகுத்துப் பார்த்தால், தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு விழுந்த வாக்குகளைக் கூட்டிப்பார்த்தால், மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குத்தான் அதிகமாக வாக்களித்திருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் கட்சிகள் சிதறி நின்று வாக்கு கேட்டபடியால் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. தேசிய மக்கள் சக்தி ஒன்றாக நின்று வாக்குகளைத் திரட்டியது. அதனால் மூன்று ஆசனங்களை யாழ்ப்பாணத்திலும் இரண்டு ஆசனங்களை வன்னியிலும் இரண்டு ஆசனங்களை கிழக்கிலுமாக, மொத்தம் ஏழு ஆசனங்களை வென்றது.

தேசிய மக்கள் சக்திக்கு விழுந்த வாக்குகள் மொத்த தமிழ் தேசிய வாக்குகளை விடக் குறைவாக இருக்கலாம். ஆனால் தேர்தல் கணக்கின்படி அவர்களுக்கு இப்பொழுது தமிழரசு கட்சிக்கு சமமான பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கிறது.

அதை வைத்து விமல் வீரவன்ச கூறுகிறார், இனவாதம் மற்றும் பிரிவினைவாதத்திற்குத் தாம் எதிரானவர்கள் என்ற செய்தியை தமிழ் மக்கள் வழங்கியுள்ளதாக. ஒற்றை ஆட்சிக்குள் அனைத்து இன மக்களும் சம உரிமை கிட்டும் வகையிலான பயணத்தைத் தொடர வேண்டும் என்பதற்குரிய ஆணையே அதுவென்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

சட்டத்தரணி பிரதீபா மகா நாம என்பவர் கூறுகிறார், “இனி வரும் காலங்களில் ஜெனிவாவில் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று கூற முடியாது” என்று.

தேசிய மக்கள் சக்தியின் மூத்த தலைவராகிய ரில்வின் சில்வா கூறுகிறார், வடக்கு கிழக்கு மக்கள் இனவாதத்தைப் புறந்தள்ளிவிட்டு தமக்கு வாக்களித்திருப்பதாக.

இலங்கை வரலாறிலேயே முதற் தடவையாக தெற்கை மையப்படுத்திய கட்சிக்கு - தேசிய மக்கள் சக்திக்கு - யாழ்ப்பாண மக்கள் வாக்களித்திருப்பதாக - இலங்கைக்கான சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறியுள்ளார். தான் பருத்தித்துறைக்குச் சென்றதாகவும் அங்கே ஒரு வாசகத்தைப் பார்த்ததாகவும், “பல்வகைமைக்குள் ஒற்றுமை” என்பதே அந்த வாசகம் என்றும், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அந்த வாசகம் நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்டிராத ஒரு கட்சிக்கு தமிழர் தாயகத்திலிருந்து ஏழு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஒரு பின்னணியில் இது போன்ற கருத்துக்களை எதிர்பார்க்கத்தான் வேண்டும். ஆனால் தமிழ் மக்கள், தேசிய மக்கள் சக்தி இனப்பிரச்சினையைத் தீர்க்கும் என்று நம்பி வாக்களிக்கவில்லை. ஏனெனில், தேசிய மக்கள் சக்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரப்படும் என்று கூறி வாக்குக் கேட்கவில்லை. மாறாக, தமிழ்த் தேசிய கட்சிகளின் மீது ஏற்பட்ட வெறுப்பினாலும் சலிப்பினாலும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள் என்பதுதான் சரியான தர்க்கம்.

மேலும் ரில்வின் சில்வா கூறுவது போல தமிழ்த் தேசியவாத அரசியல் எனப்படுவது இனவாதம் அல்ல. சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் எனப்படுவது ஓர் ஒடுக்கும் தேசியவாதமாகும். தமிழ்த் தேசியவாதம் எனப்படுவது அந்த ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத் தத்துவம் ஆகும். ஒடுக்குமுறைக்கு எதிரான எல்லாத் தேசியவாத போராட்டங்களும் முற்போக்கானவை என்று மார்க்சியம் தெளிவாகக் கூறுகின்றது. எனவே தமிழ்த் தேசிய வாதத்தை இனவாதம் என்று கூறுவதுதான் சுத்த இனவாதம்.

ஆனால் இப்படியெல்லாம் தெனிலங்கையில் இருப்பவர்கள் கருத்துக் கூறுமளவுக்குத் தேர்தல் முடிவுகள் காணப்படுகின்றன.

தமிழரசுக் கட்சிக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தோடு சேர்த்து இப்பொழுது எட்டு ஆசனங்கள். கடந்த முறையை விட இம்முறை இரண்டு ஆசனங்கள் அதிகம். தமிழ் தேசிய கட்சிகளுக்குள் வடக்கு கிழக்கை இணைத்த பரவலான கட்டமைப்பைக் கொண்டிருக்கும் ஒரே கட்சி தமிழரசுக் கட்சி தான் என்பதனை தேர்தல் முடிவுகள் மீண்டும் நிரூபித்திருக்கின்றன. தனிப்பெருங் கட்சியாக அது அதிக ஆசனங்களைப் பெற்றிருக்கிறது. ஆனால் அந்த வெற்றியை அவர்கள் கொண்டாட முடியாது. ஏனென்றால் ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய அரசியலானது வீழ்ச்சி அடைந்திருக்கிறது. தமிழ்த் தேசியப் பிரதிநிதித்துவம் குறைந்திருக்கிறது. தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த ஆசனங்களும் தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த ஆசனங்களும் சமமானவை என்பதே தமிழரசுக் கட்சிக்கு பெரிய அவமானம். தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தவரை அது பின்னடைவு.

டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன், பிள்ளையான் போன்றவர்களுக்கு கிடைத்த வாக்குகள்தான் இப்பொழுது ஒரு சேர தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்திருக்கின்றன என்று கூறி ஒரு பகுதி தமிழ் தேசியவாதிகள் தங்களை சமாதானப்படுத்திக் கொள்ளக்கூடும். இன்னொரு பகுதியினர் யார் வென்றாலும் வெல்லாவிட்டாலும் சுமந்திரன் தோற்கடிக்கப்பட்டு விட்டார் என்று சந்தோசப்படக்கூடும். ஆனால் இங்கு ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசிய அரசியலின் பிரதிநிதித்துவப் பலம் குறைந்திருக்கிறது. தமிழ்த் தேசிய வாக்கு வங்கிக்குள் இருந்து ஒரு தொகுதி வாக்குகள் கொத்தாக தெற்கை நோக்கிப் போடப்பட்டிருக்கின்றன.

இந்தப் பின்னடைவுக்கு எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் சுயேச்சைகளும் குறிப்பாக தமிழரசுக் கட்சியும் பொறுப்பு.கடந்த 15 ஆண்டு கால தமிழரசியலில் தமிழரசுக் கட்சிதான் மையமாக இருந்தது. சுமந்திரன் அதுதான் தலைமை தாங்கும் கட்சி என்ற பொருள்பட அவ்வப்போது கருத்து தெரிவித்துள்ளார். அப்படிப் பார்த்தால் கடந்த 15 ஆண்டுகளில் தமிழ் பிரதிநிதித்துவம் படிப்படியாகக் குறைந்து வருவதற்கும் தேசிய மக்கள் சக்திக்கு ஏழு ஆசனங்கள் கிடைத்ததற்கும் தமிழரசுக் கட்சிதான் பொறுப்பு. அந்தத் தோல்விக்கு பொறுப்பேற்று தமிழரசு கட்சி தன்னை சுய விசாரணை செய்யுமா? சுமந்திரன் பொறுப்புக் கூறுவாரா?

எல்லாத் தவறுகளையும் தமிழரசுக் கட்சியின் தலையிலும் ஏனைய கட்சிகளின் தலையிலும் சுமத்திவிட்டு அதன் மூலம் தங்களைப் புனிதர்களாகக் கட்டமைக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் தோல்வி. அர்ஜுனாவுக்கும் அவருடன் நிற்கும் பெண் சட்டத்தரணிக்கும் கிடைத்த வாக்குகளை விடவும் குறைந்த விருப்பு வாக்குகள்தான் முன்னணியின் முக்கிய தலைவர்களுக்கு கிடைத்திருக்கிறது. அவ்வாறாயின் மக்கள் எங்கே நிற்கிறார்கள்? கட்சிகள் எங்கே நிற்கின்றன?

சங்கை வசப்படுத்திய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வாக்குகளை நாடாளுமன்றத் தேர்தலுக்கு மடை மாற்றலாம் என்று கற்பனை செய்தது. ஆனால் மக்கள் மயங்கவில்லை.

தொகுத்துப் பார்த்தால் தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்கு இடையே பிடுங்கப்பட்டதன் விளைவை இப்பொழுது அறுவடை செய்திருக்கின்றன. தேசத்தைத் திரட்டவில்லையென்றால் அதாவது இனத்தைத் திரட்டவில்லையென்றால் கட்சிகளையும் திரட்ட முடியாது என்பதுதான் இம்முறை தேர்தல் கற்றுத் தந்திருக்கும் பாடமாகும். இனத்தைத் திரட்டாமல் கட்சிகளைத் திரட்ட வெளிக்கிட்டால், அதனால் சிதறடிக்கப்பட்ட மக்களை வெளியார் கவர்ந்து சென்று விடுவார்கள்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கின் தமிழர்கள் சரியான முடிவோடு வாக்களித்துள்ளனர் என்றார் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங்!




அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்ச் சமூகம் ஒரு சரியான முடிவை எடுத்திருக்கின்றது என்றே நான் நம்புகின்றேன். அந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றிருப்பதானது தமிழ் மக்கள் பரந்த சிந்தனையோடு விடயங்களை இப்போது நோக்க ஆரம்பித்திருக்கின்றார்கள் என்றே தோன்றுகின்றது. இவ்வாறு, யாழ்ப்பாணம் சென்றுள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, யாழ்ப்பாணத்துக்கு வந்தது்ள்ளமை மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. வடக்கு மாகாணத்தில் வாழுகின்ற எங்களுடைய சகோதர - சகோரிகளின் வாழ்க்கை முறை எவ்வாறு இருக்கின்றது, இங்கு அவர்கள் எவ்வாறு வாழ்கின்றார்கள், இந்த வாழ்க்கையை எவ்வாறு கொண்டு செல்கின்றார்கள் என்பவற்றை அறிந்துகொள்வதே எமது இந்தப் பயணத்தின் நோக்கமாக உள்ளது.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மிகப் பெரிய அளவில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளது. அதுவும் தெற்கை மையப்படுத்திய ஒரு தேசியக் கட்சிக்கு யாழ்ப்பாணத்திலும் மிகப் பெரும்பான்மையாக ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

நான் பருத்தித்துறைக்குச் சென்றிருந்தேன். அங்கு ஆங்கிலத்தில் எழுதப்பட்டு இருந்த ஒரு வாக்கியத்தைப் பார்த்தேன். அதாவது பன்மைத்துவத்தில் ஒற்றுமை என்று இருந்தது. உண்மையில் அந்த வாக்கியம் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சரியாவே பிரதிபலித்துள்ளது.

தற்போது இவையெல்லாம் யாழ்ப்பாணத்தில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதையே காட்டுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பத்தில் நான் இங்கு விஜயம் செய்வது மிகவும் அர்த்தம் உள்ள ஒன்றாகவே கருதுகின்றேன்.

நான் வடக்கு மாகாணத்துக்கு முதல் தடவையாகக் கொவிட் காலகட்டத்திலேயே வந்திருந்தேன். அந்தக் கால கட்டத்திலேதான் சினோபாம் கொவிட் தடுப்பூசிகளை சீன அரசு இலங்கைக்கு வழங்கி இருந்தது. அப்போது சினோபாம் என்ற எமது தடுப்பூசிகளை வடக்கு, கிழக்கு முழுவதும் முழுமையாகப் பாவிக்க வேண்டும் என்று இலங்கை அரசிடம் சீன அரசு வலியுறுத்திக் கூறியிருந்தது. இவ்வாறு நாம் வலியுறுத்திக் கூறியதாலேயே இங்குள்ள மக்களுக்கும் அந்தத் தடுப்பூசிகள் பாவிக்கப்பட்டன.

இவ்வாறு வடக்கு, கிழக்கிலுள்ள எங்களுடைய சகோதர - சகோதரிகளுக்கு நம் தடுப்பூசிகளை வழங்கியதைத் தொடர்ந்து இங்குள்ளவர்களுக்கு எங்களுடைய பல்வேறு உதவிகளைச் செய்தோம். அதனடிப்படையில் வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கினோம். அதேபோன்று ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளையும், மீன்பிடி உபகரணங்களையும் வழங்கினோம்.

அந்த ஆண்டின் முதல் அரைநாண்டு காலத்தில் சீன அரசால் பல மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகளை வடக்கு மாகாணத்துக்கு மட்டும் வழங்கியிருக்கின்றோம். இதற்கமைய வீட்டுத் திட்டம், அரிசி, மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றை வழங்கினோம். இவற்றில் அரிசியை முழுமையாக வழங்கியுள்ளோம். ஆனாலும், வீட்டுத் திட்டம் மற்றும் மீன்பிடி உபகரணங்களை இப்போதும் வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

சீன அரசு வழங்கிய உதவிகளின் பட்டியல் இலங்கை அரசால் தயாரிக்கப்பட்டவைதான். அந்தப் பட்டியலுக்கமைய எமது உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. சீனாவினுடைய நீண்டகால நண்பனாக இலங்கை இருக்கின்றது. ஆகையினால் இலங்கை அரசு எடுக்கும் அனைத்து முடிவுகளையும் சீன அரசும் மதிக்கும்.

இலங்கை அரசுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒரு இணக்கப்பாட்டுக்கு முன்னேற்பாடான ஒரு ஒப்பந்தத்தை முதன் முதலில் சீனாதான் எழுதியது. அதனைக் கடந்த ஆண்டு செய்திருக்கின்றோம். இதில் இருந்து நீங்கள் ஒன்றை விளங்கிக்கொள்ளக் கூடியது என்னவெனில் சீன அரசு ஒரு முன்னுதாரணமாக இந்த விடயங்களைச் செய்து வருகின்றது என்பதைப் பார்க்கலாம்.

இலங்கையினுடைய மிக நெருக்கமான அயல்நாடாக இந்தியா இருக்கின்றது. அதனால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு பலப்படுவதையும், பொருளாதார ரீதியான நெருக்கம் பலப்படுவதையும் நாங்களும் விரும்புகின்றோம்.

இவ்வாறான நிலைமையில் வருகின்ற டிசம்பர் மாதத்தில் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்குச் செல்லவுள்ளார் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள விஜித ஹேரத் கூறியிருக்கின்றார். இது மிகவும் சந்தோசமான விடயம். அவ்வாறு அவர்கள் விஜயம் செய்வதை நாங்கள் விரும்புகின்றோம். அதன் பிற்பாடு இலங்கை ஜனாதிபதி அவருக்கு ஏற்ற வகையில் பொருத்தமான நேரத்தில் சீனாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளலாம். ஏனெனில் சீனாவுக்கும் இலங்கை மக்களுக்கும் இடையில் பொருளாதார மேம்பாடுகளும் பரிமாற்றங்களும் வளர்ந்து வர வேண்டுமென்றே நாங்களும் விரும்புகின்றோம்.

சீனாவுக்கு வடக்கு மக்களுடன் செய்ய வேண்டிய கலாசார மற்றும் கல்வி ரீதியான இரு தரப்பு பரிமாற்றங்கள் முக்கியமானவையாக இருக்கின்றன. சீன அரசு இலங்கைக்கு அதிகூடிய வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் வழங்குகின்ற ஒரு நாடாகவே இருந்து வருகின்றது.

ஏனென்றால் சீனாவைப் பொறுத்த வரையில் இலங்கை மக்களின் ஆற்றலும் திறமையும் வளர்க்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய விருப்பமாக உள்ளது. எனக்குத் தெரிந்தவரைக்கும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கும் சீனாசார் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் கல்விசார் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்றே வருகின்றன.

நான் அறிந்த வரையில் சீன புலமையாளர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும், யாழ். பல்கலைக்கழகப் புலமையாளர்கள் சீனப் பல்கலைக்கழகத்திலும் தங்களுடைய கற்கை நெறிகளைக் கற்று வருகின்றார்கள்.

எனக்கு குழப்பகரமான ஒரு உணர்வை ஏற்படுத்துவது என்னவெனில், என்னுடைய சக உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கும் சீனப் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துவதற்கு விரும்புகின்றதால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தோடு தொடர்பை ஏற்படுத்துகின்றபோது அவர்களால் உரிய முறையில் தொடர்பை ஏற்படுத்துவதில்லை என்பது குழப்பகரமான உணர்வைத் தருகின்றது.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்ச் சமூகம் ஒரு சரியான முடிவை எடுத்திருக்கின்றது என்றே நான் நம்புகின்றேன். அந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றிருப்பதானது தமிழ் மக்கள் பரந்த சிந்தனையோடு விடயங்களை இப்போது நோக்க ஆரம்பித்திருக்கின்றார்கள் என்றே தோன்றுகின்றது. இதனூடாக இனங்களுக்கிடையிலான ஒற்றுமையும் நல்லிணக்கமும் ஏற்பட்டு ஒளிமயமான எதிர்காலம் இந்த நாட்டில் ஏற்படுவதற்கான ஒரு குறியீடாகவே நான் இதனைப் பார்ப்பதாக உள்ளது என்றார்.

# சுழிபுரத்தில் வாள் வைத்து அட்டகாசம் செய்த இளைஞனை மடக்கி பிடித்த ஊரவர்கள்!



வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் பாண்டவட்டை பகுதியில் வாள்வைத்து அட்டகாசம் செய்த 18 வயதுடைய இளைஞன் ஒருவர் ஊரவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

19-11-2024 அன்றைய தினம் குறித்து இளைஞன் இவ்வாறு வாள் மூலம் மிரட்டுதல் விடுத்த நிலையில் ஊரவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்.

குறித்த இளைஞனை வட்டுக்கோட்டை பொலிஸிடம் ஒப்படைத்த நிலையில் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னாரில் இறந்த இளம் தாய் மற்றும் பிறந்த சிசு ஆகியோரின் மரணங்களுக்கு நீதி கோரி போராட்டம்

20.11.2024



மன்னார் பொது வைத்தியசாலையில் மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்த தாய் மற்றும் சிசுவின் மரணத்துக்கு நீதி கோரி மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக 20-11-2024 அன்று புதன் மாலை 4.30 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம் பெற்றது.

தாயின் மரணத்துக்கு நீதி வழங்கவேண்டும், தவறு செய்தவர்கள் கைது செய்யப்படவேண்டும், வைத்தியசாலை நிர்வாகம் மாற்றப்பட வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அமைதியான முறையில் போராட்டம் இடம் பெற்றது.

போராட்டத்தின் போது பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்ட நிலையில் வைத்தியசாலைக்குள் போராட்டகாரர்கள் நுழைய முற்பட்ட நிலையில் கலவரம் ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து பொலிஸாருக்கும் மக்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டது. இதன் காரணமாக கலகம் அடக்கும் பொலிஸாரும் வரவலைக்கப்பட்டனர்.

அதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினர் இறந்த பெண்ணின் பெற்றோரிடம் கலந்துரையாடிய போதும் சுமூகமான நிலை ஏற்படவில்லை.



போராட்டகாரர்கள் தொடர்ந்தும் கொட்டும் மழையில் மன்னார் பொது வைத்தியசாலைக்கும் முன்னர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

செய்தி அனுப்பும் வரை போராட்டம் இடம் பெற்றுக்கொண்டுள்ளது

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரசவத்தின் போது தாயும் சேயும் மரணம்

## வைத்தியசாலையின் கவனயீனம் என குற்றசாட்டு



- எஸ்.ஆர்.லெம்பேட் (19-11-2024)

மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் 19-11-2024 அன்றைய தினம் பிரசவத்துக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் தாயும் சேயும் மரணமடைந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியை சேர்ந்த 28 வயதான வனஜா என்ற திருமணமாகி 10 வருடங்களே ஆன இளம் தாயே 19ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றைய தினம் மன்னார் வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

முன்னதாகவே குறித்த பெண்ணுக்கு மூச்சு திணறல் ஏற்பட்டிருந்த போதிலும் உரிய விதமாக கவனிக்கப்படவில்லை எனவும் பெண் தனக்கு சிசேரியன் செய்யுமாறு கோரிக்கை விடுத்ததாகவும் வைத்தியர்கள் இயற்கை முறையில் பிரசிவிக்க முயற்சித்த நிலையில் தாயும் பிள்ளையும் மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் கவனயீனத்தாலேயே குறித்த மரணம் இடம் பெற்றுள்ளதாகவும் மரணம் அடைந்த விடயத்தை நீண்ட நேரமாக உறவினர்களுக்கு சொல்லாமல் மறைத்ததாகவும் உயிர் இழந்த பெண்ணின் உடலை கூட பார்பதற்கு பெற்றோரை அனுமதிக்கவில்லை எனவும் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த பெண்ணின் மரணத்துக்கு உண்மையான காரணம் என்ன என தெரிவிக்கும் வரை உயிரிழந்த பெண்ணின் உடலை பெற்றுக்கொள்ள போவதில்லை என உறவினர்கள் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்தில் பொதுமக்கள், பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் கூடியிருந்த போதிலும் வைத்தியசாலை பணிப்பாளர், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளோ சம்பவ இடத்திற்கு நீண்ட நேரம் வருகை தரவில்லை எனவும் அவருடைய தொலைபேசியும் இயங்கவில்லை என உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த பிரசவ விடுதியில் பணிபுரியும் சில ஊழியர்கள் தொடர்சியாக கவனயீனமாக செயற்படுவதாகவும் வேலை நேரத்தில் நாடகங்கள் பார்பதாகவும், தொலைபேசிகளை அதிகம் பயன்படுத்துவதாகவும், பிரசவ விடுதிக்குள் நாய்கள் நிற்பதாகவும் அவற்றை கூட அவர்கள் கண்டு கொள்வதில்லை எனவும் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட பெண்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பின்னனியில் மன்னார் பொது வைத்தியசாலையில் பிரசவ விடுதியில் கவனயீனத்தால் இவ்வருடத்தில் இடம் பெற்ற மூன்றாவது மரணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# இந்த வெற்றியானது ரணில் – ராஜபக்ச அரசின் கொடூரமான ஆட்சிக்கும், பொருளாதார சுரண்டல்களுக்கும், எதிராக அளிக்கப்பட்ட வாக்குகளின் வெற்றி என்கிறார் கலாநிதி சிதம்பரமோகன் நம்பிக்கை!




இதுவரை காலமும் ஏற்பட்டிருந்த வேதனைக்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா அவர்கள் தேர்வினை வழங்குவார் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை தேசிய மக்கள் சக்தி சார்பில் மக்கள் தெரிவு செய்துள்ளதாக ஐக்கிய இடதுசாரி கூட்டணியின் தலைவர் கலாநிதி சிதம்பரமோகன் தெரிவித்துள்ளார்.

16-11-2024 அன்று சனிக்கிழமை மாலை வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வெற்றியானது தென் இலங்கையில் இருந்த ரணில் - ராஜபக்ச அரசின் கொடூரமான ஆட்சிக்கும், பொருளாதார சுரண்டல்களுக்கும், ஏகாதிபத்திய தாக்கத்திற்கும் எதிராக அழிக்கப்பட்ட வாக்குகளின் வெற்றி. அதுபோல வடக்கு இலங்கையில் தமக்கு ஏற்பட்ட அத்தனை தோல்விகளுக்கும் கடந்த கால ஜனாதிபதிகளாலோ பிரதமர்களாலோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களாலோ எந்தவிதமான நீதியும் கிடைக்கப் பெறாத நிலையில் அவர்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து உள்ளார்கள். எனவே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கா அவர்கள் தமிழர்களது எதிர்பார்ப்பை நிச்சயமாக நிறைவேற்றுவார் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்திலேயே இந்த நாடு நிர்மூலமாக்கப்பட்டது. அவருடைய திறந்த பொருளாதார கொள்கை காரணமாக, சம உடமை பொருளாதாரத்துடன் விவசாயத்தை முன்னிறுத்தி இருந்த நாடு எங்கள் இறக்குமதி பொருளாதாரத்தை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து 1983 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட வன்முறைகளால், இலங்கை முழுவதும் இருந்த தமிழ் மக்கள் கட்டிய உடையுடன் வடக்கு மாகாணத்திற்கு வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அத்துடன் மலையகத்தில் வாழ்கின்ற இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் வடகிழக்கிற்கும் இந்தியாவிற்கும் புலம்பெயர் வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இதன்போது அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெவர்த்தன அவர்கள் மலையகத்தின் சிரேஷ்ட தலைவரான தொண்டமானிடம் கேட்ட ஒரு கேள்வி யுத்தமா சமாதானமா என்று. ஒரு பொறுப்பு மிக்க நாட்டின் ஜனாதிபதி தமிழ் மக்களை கேட்ட கேள்வி தான் யுத்தமா சமாதானமா என்று.

அதன்பின்னர் தமிழ் மக்கள் தாங்கள் பிரிந்து போவதற்கு காரணமாக இருந்தது ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஆட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையும் தான். அதன்பின்னர் 1983 ஆம் ஆண்டு இலங்கையில் மூன்று கட்சிகள் தடை செய்யப்பட்டன. மக்கள் விடுதலை முன்னணி, நவசமாஜ கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளும் வன்செயலுடன் எந்த ஒரு தொடர்பும் இல்லாத நிலையில் தடை செய்யப்பட்டன. அன்றிலிருந்து ஏறக்குறைய 17 வருடங்கள் இடதுசாரிகள் இந்த நாட்டில் பாரிய துன்பத்தை எதிர்கொண்டார்கள்.

இவற்றுக்கு எல்லாம் பின்னர் வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கு ஒரு கதையையும் சிங்கள மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்கு ஒரு கதையையும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அத்துடன் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் அரசியல்வாதிகள் ஒரு நிரந்தர தீர்வான அரசியலை செய்யாத நிலையில், அவர்கள் சர்வதேசத்தை மாத்திரம் நம்பி இருந்த நிலையில் சிங்கள மக்களிடம் தங்களது பிரச்சினையை கொண்டு செல்லாத நிலையும் இருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் தான் இந்த நாட்டில் எது நடக்க வேண்டும் என சிங்கள மக்களும் சிங்கள விவசாயிகளும், தமிழ் மக்களும் தமிழ் விவசாயிகளும் விரும்பினார்களோ அவ்வாறான ஒரு இடதுசாரி கட்டமைப்பை கொண்ட ஜனாதிபதி தெளிவாகியுள்ளார். இந்த தெரிவு நாட்டில் மிகப் பெரிய ஒரு மாற்றத்தை மட்டுமல்ல மிகப்பெரிய ஒரு எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, பல்தேசிய கம்பெனி ஆகியவற்றினால் எமது நாட்டின் வளங்கள், சொத்துக்கள் அனைத்தும் சூறையாடிக்கொண்டிருந்து நிலையில் இறுதிக்காலத்திலாவது இலங்கை மக்களுக்கு ஒரு சுதந்திரம் கிடைத்திருக்கின்றது என நான் நம்புகின்றோம். எமது நாட்டின் வளங்கள் சூறையாடப்படுவதற்கும் சொத்துக்கள் அழிப்பதற்கும் எதிராக செயல்படக்கூடிய ஜனாதிபதியாக எமது ஜனாதிபதி அநுர செயல்படுவார் என நம்புகின்றோம்.

இந்த நாட்டின் ஏழை மக்களின் காணியை சுவீகரிப்பதற்காக 87ஆம் ஆண்டு அரச காணிகள் மீறப்பெறுதல் சட்டத்தின் 7வது உப பிரிவை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்து. இதன்மூலம் மலையக மக்களுக்கு இருந்த காணி உரிமை பறிமுதல் செய்யப்பட்டது. வடகிழக்கில் இருந்த மக்களது சொந்த காணிகள் இல்லாது செய்யப்பட்டது.

அடுத்ததாக மகாவலி சட்டம் கொண்டுவரப்பட்டு காணிகள் பறிக்கப்பட்டது. ஒரு அங்குலம் காணி கூட வடக்கு கிழக்கில் இருக்கின்ற மக்களுக்கு வழங்கப்படவில்லை. இது கவலைக்குரிய விஷயம். இவ்வாறான பின்னணியில் தான் தமிழர் இளைஞர்கள் 30 வருடங்கள் ஆயுதம் தூக்க வேண்டிய ஒரு பின்னணி ஏற்பட்டது.

வடக்கு கிழக்கிலே இலட்சக்கணக்கான இளைஞர்கள் யுவதிகள் அழிந்து விட்டார்கள். எங்களுடைய செல்வங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். பலர் அங்கவீனர்களாக இருக்கின்றார்கள். இவ்வாறான சூழ்நிலையில் யுத்தம் முடிவடைந்த பின்னர் ஒரு ஐந்து சதவீதங்களேனும் இந்த மக்களுடைய பொருளாதார அபிவிருத்தியோ அல்லது மன ரீதியான அபிவிருத்தியோ ஏற்படவில்லை. வீதி அபிவிருத்திகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூறுகின்றார்கள். அது உண்மை, ஆனால் அதன் மூலம் தமிழ் மக்களுடைய அபிலாசைகள் நிறைவேற்றப்படவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஆகக் குறைந்தது திம்பு மாநாட்டின் கோட்பாட்டின்படியாவது அந்த நாலு அம்ச கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கலாம். வடக்கு கிழக்கு இணைந்து ஒரு மாகாண சபை முறைமை நிறைவேற்றப்பட்டிருக்கலாம். அந்த மக்களுக்கு ஒரு சுய நிர்வாக கட்டமைப்பாவது ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் இவை இவை நிறைவேற்றப்படாத நிலையில் 30 வருட யுத்தத்தைப் போலவே தமிழ் மக்கள் இப்பொழுதும் வேதனையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அல்லது ஈடுபடாத தமிழ் இளைஞர் யுவாதிகள் பயங்கரவாத தடை சட்டத்தின் மூலமாக கைது செய்யப்படுகின்றார்கள். அவர்கள் இன்றும் சிறையிலே வாடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எடுத்த வழிமுறை சரி பிழை என்பதற்கு அப்பால் தமது இந்த மண்ணிற்காக போராடினர்கள்.

இதுவரை காலமும் சிறையில் வாடிக் கொண்டிருக்கின்ற அரசியல் கைதிகளை பொது மன்னிப்பில் விடுதலை செய்வதாக கூறிய எந்த ஒரு ஜனாதிபதியும் இதுவரை விடுதலை செய்யவில்லை. இவ்வாறான சூழ்நிலையில்தான் இந்த 2024 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியாக இருந்து மாற்றம் பெற்ற தேசிய மக்கள் சக்தி பாரிய வெற்றி பெற்றுள்ளது.

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies
மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches
நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer
மாதவிடாய் சம்பந்தமானவையும் | Menstruation
உடற்பருமன் குறைத்தல் | Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பு கல்லடியில் தனது வீட்டில் தனிமையில் இருந்த சுவிஸ் நாட்டு பெண்மணியை தாக்கி இரண்டு கோடியே 42 இலட்ச்சம் ரூபா கொள்ளை

கனகராசா சரவணன்



காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கல்லடி பிரதேசத்தில் வீட்டில் தனிமையில் தங்கியிருந்த சுவிஸ் நாட்டு பிரஜையான பெண் ஒருவரின் வீட்டின் கதவவை 20-11-2024 அன்று புதன்கிழமை அதிகாலை 12.00 மணியளவில் உடைத்து உள்நுழைந்த கொள்ளையன் பெண்ணை கடுமையாக தாக்கிவிட்டு அங்கிருந்து இரண்டு கோடி 40 லட்சம் ரூபாய் வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் ஒன்றேகாப் பவுண் சங்கிலி 29 ஆயிரம் ரூபாய் இலங்கை நாணயம் என்பவற்றை கொள்ளையிட்டு தப்பி ஓடியுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது, கல்லடி பேபிசிங்கம் வீதியைச் சேர்ந்த 62 வயதுடைய சுப்பையாபிள்ளை கோணேஸ்வரி 1990 ஆம் ஆண்டு குடும்பத்துடன் இடம்பெயர்ந்து சுவிஸ் நாட்டுக்குச் சென்ற குடியேறி அங்கு தாதியாகவும் கணவன் பொறியலாளராகவும் மகள் விஞ்ஞானியாகவும் பணியாற்றிவருகின்ற நிலையில் அவர் தாதியரில் இருந்து ஓய்வு பெற்றுள்ள நிலையில் இலங்கையிலுள்ள தனது வீட்டை பார்ப்பதற்காக இலங்கைக்கு திரும்பி விஜயம் செய்து வீட்டில் தற்காலிகமாக தனிமையில் தங்கியிருந்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவதினமான இன்று அதிகாலை 12 மணியளவில் வீட்டின் குளியலறை பகுதி யன்னல் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் குறித்த பெண்ணை சரமாரியாக தாக்கிவிட்டு அங்கிருந்த அலுமாரியை உடைத்து 72 ஆயிரம் ஸ்விஸ் பிராங் (இலங்கை நாணயம் இரண்டு கோடி 40 லட்சம்) மற்றும் ஒன்றேகால் பவுண் தங்க சங்கிலி 29 ரூபாய் ஆயிரம் ரூபாய் இலங்கை நாணயம் என்பவற்றை கொள்ளையிட்டு தப்பி ஓடியுள்ளதாக பொலிசாரின் ஆரம்ப கட்டவிசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகார சப்இன்பெஸ்டர் ஏ.எம்.எஸ்.ஏ.றஹீம் தலைமையில சென்ற பொலிசார் தடயவியல் பிரிவு மற்றும் மோப்பநாய் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நவம்பர் 21 அன்று கூடவுள்ள பத்தாவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வை சம்பிரதாயபூர்வமாகத் ஆரம்பிப்பதற்கான ஒத்திகை பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது

பாராளுமன்ற அறிக்கையின்படி, 10வது பாராளுமன்றம் 21-11-2024 காலை 9:55 மணிக்கு வாக்கழைப்பு மணி ஒலித்ததைத் தொடர்ந்து, 10:00 மணிக்கு ஆரம்ப அமர்வு ஆரம்பமாகிறது.

சபையில் செங்கோலை வைத்த பின்னர், பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம், ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களை, அமர்வுக்கான திகதி மற்றும் நேரத்தை நிர்ணயம் செய்து, முதல் அலுவலாக முன்வைப்பார்.

பின்னர் அரசியலமைப்பின் 64(1) மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 4, 5 மற்றும் 6 ஆகியவற்றின் விதிகளின்படி சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

பின்னர், சபாநாயகர் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுப்பார், சபாநாயகரின் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை, பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை, பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் வாக்களிப்பினால் தெரிவுசெய்தல் என்பன இடம்பெறும்.

முதலாவது நாளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆசன ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாது என்பதால் தமக்கு விரும்பிய ஆசனங்களில் அமர முடியும் என்பது விசேடமானதாகும்.

முதற்கட்ட சம்பிரதாயங்களைத் தொடர்ந்து, பாராளுமன்றம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும். முற்பகல் 11:30 மணிக்கு ஜனாதிபதி அனுரகுமார திஸ நாயக்க சபாநாயகர் தலைமையில் அரசியலமைப்பின் 32(4) மற்றும் 33 ஆவது சரத்துகளின்படி அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை சமர்ப்பிப்பார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் ஆரம்ப நிகழ்வை எளிமையான முறையில் நடத்துமாறு ஜனாதிபதி வழங்கிய பணிப்புரைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு அமைய ஜயமங்கள கீதம், முப்படையினரின் அணிவகுப்பு, மரியாதை வேட்டுக்கள் தீர்த்தல் மற்றும் வாகனப் பவனி என்பன இடம்பெறாது என படைக்கல சேவிதர் குˆஷான் ஜயரத்ன தெரிவித்தார்.

இதற்கு அமைய மு.ப 11.00 மணிக்கு சகல விருந்தினர்களும் தமது இருக்கைகளில் அமரவைக்கப்படவுள்ளனர். மு.ப 11.10 மணிக்கு பாராளுமன்ற கட்டடத்தின் பிரதான நுழைவாயிலின் படிக்கட்டுக்கு அருகில் கௌரவ சபாநாயகர் வரவேற்கப்படவுள்ளார். அதனைத் தொடர்ந்து மு.ப 11.15 மணிக்கு கௌரவ பிரதமர் வரவேற்கப்படவிருப்பதுடன், இதன் பின்னர் கௌரவ ஜனாதிபதியின் வருகை இடம்பெறும்.

அதன்படி மு.ப 11.20 மணியளவில் கௌரவ சபாநாயகர், பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர உள்ளிட்டோர் கௌரவ ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களைப் பாராளுமன்ற கட்டடத்தின் பிரதான படிக்கட்டுகளுக்கு அருகில் வரவேற்கவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து படைக்கலசேவிதர், பிரதி படைக்கல சேவிதர் மற்றும் உதவி படைக்கல சேவிதர் ஆகியோர் முன்செல்ல கௌரவ சபாநாயகர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரினால் ஜனாதிபதி பாராளுமன்ற கட்டடத்துக்குள் அழைத்துச் செல்லப்படுவார்.

இதன் பின்னர் உடையணி அறைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ள ஜனாதிபதி அவர்கள் மு.ப 11.25 மணிவரை அங்கிருப்பதுடன், அதனைத் தொடர்ந்து பாரம்பரியத்துக்கு அமையப் பிரதிப் படைக்கல சேவிதர், செங்கோலைக் கையில் தாங்கியவாறு படைக்கல சேவிதர், ஜனாதிபதி, சபாநாயகர், செயலாளர் குழு மற்றும் உதவிப் படைக்கல சேவிதர் என்ற வரிசைப்படி அணிவகுத்து சபா மண்டபத்துக்குள் செல்வர்.

சபைக்குள் நுழையும்போது உதவி படைக்கல சேவிதர் “கௌரவ ஜனாதிபதி” எனத் தெரிவித்ததும் ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது ஆசனங்களிலிருந்து எழுந்து நிற்பது பாரம்பரியமாக இடம்பெறும்.

சபா மண்டபத்துக்கு அழைத்துவரப்படும் ஜனாதிபதி அங்கிராசனத்தில் அமர்ந்து சபைக்குத் தலைமை தாங்குவார். இதன்போது சபாநாயகர், பாராளுமன்ற குழுநிலையின்போது அமரும் கீழ் பகுதியிலுள்ள ஆசனத்தில் செயலாளர் குழுவுடன் அமர்ந்திருப்பார். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியினால் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரை நிகழ்த்தப்பட்டு, சபை ஒத்திவைக்கப்படும்.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் ஆரம்ப நாள் நிகழ்வில் வெளிநாட்டு இராஜதந்திரிகள், முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர்கள், பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், சட்டமா அதிபர், அமைச்சுக்களின் செயலாளர்கள், முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட விசேட விருந்தினர்கள் கலந்துகொள்ளவிருப்பதாக படைக்கல சேவிதர் குஷான் பெர்னாந்து தெரிவித்தார்.

விருந்தினர்களுக்கான அழைப்பிதழ்கள் இலத்திரனியல் முறையில் (Invitations) அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பு கிருமிச்சை கிராமத்துக்கு குடிநீர்த் திட்டம் கையளிப்பு வழங்கும் வைபவம்

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிருமிச்சை கிராம மக்களின் அடிப்படை தேவையான சமூகத்திற்கு பாதுகாப்பான மற்றும் சுத்தமான குடிநீர் எனும் தொனிப் பொருளில் குடிநீர் வழங்கும் திட்டத்தில் வன்னி ஹோப்பை அமைப்பு வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தினை கடந்த 18ம் திகதி திங்கட்கிழமை மக்கள் பாவனைக்காக கையளித்தனர்.

குறித்த பிரதேசத்தில் கடந்த காலத்தில் குடிநீரை பெறுவதில் பல்வேறு அசௌகரியங்களை மேற்கொண்டுவந்த அடிப்படை பிரச்சனையான குடிநீரை வழங்க கடந்த 2019 ஆம் ஆண்டு தேசிய சமூக நீர் வளங்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டிலே பிரஜா ஜல அபிமான வேலை திட்டத்தின் கீழ் இந்த குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மக்களினுடைய பங்களிப்பு போதாத நிலையில் இடைநடுவில் சில குறைபாடுகள் காரணமாக இந்த திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து இத்திட்டத்தை பூர்த்தி செய்து மக்களின் குடிநீர் பிரச்சனையை தீர்பதற்கு வன்னி ஹோப்பை நிறுவனத்தின் 25 இலச்சம் ரூபா நிதி அனுசரணையுடன் வேள்ட் விஷன் லங்கா நிறுவனம் முன்வந்தது இந்த திட்டதை நிறைவு செய்து மக்களிடம் கையளிக்கும் நிழக்வு கடந்த 18ம் திகதி இடம்பெற்றது.



இதில் அதிதிகளாக வன்னி ஹோப்பை அமைப்பின் பணிப்பாளர் வைத்தியர் ரஞ்சன் சிவஞானசுந்தரம், வைத்தியர் அரன் ஸ்ரீதரன், வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தின் முகாமையாளர் ரவீந்திரன், சலோமிக்கா செல்வராஜா. கிழக்கு மாகாணத்துக்கு பொறுப்பான கணவதிப்பிள்ளை தவசீலன். திட்ட இணைப்பாளர் தனுராஜ் தேசிய சமூக நீர் வளங்கள் திணைக்கள பொறியளார் எஸ்.பிரதீபன். நிலைய பொறுப்பதிகாரி சுலக்சனா. அபிவிருத்தி உத்தியோகத்தர் தேவராஜன். தொழில்நுட்ப உத்தியோகத்தர் கபிசாந்தன் ஆகியேர் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து நிர்மானிக்கப்பட்ட தூய்மையான குடிநீர் திட்டத்தை சம்பிராய பூர்வமாக அதிதிகள் நாடாவெட்டி மக்களின் பாவனைக்காக வழங்கிவைத்தனர்.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# அநுர குமார திசநாயக்க தலைமையிலான இலங்கை அரசிற்கு 29 பிரதியமைச்சர்கள் நியமனம்: அவற்றில் ஒரு தமிழரும் ஒரு இஸ்லாமியரும் அடங்குகின்றனர்

புதிய அரசாங்கத்தின் 29 பிரதி அமைச்சர்கள் 21-11-2024 அன்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தில் 21.10.2024 அன்று இடம்பெற்ற நிகழ்வில் இவர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பிரதி அமைச்சர்கள் விபரம் பின்வருமாறு:

1. பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ - பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்
2. நாமல் கருணாரத்ன - விவசாய, கால்நடை பிரதி அமைச்சர்
3. வசந்த ஜயதிஸ்ஸ - கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்
4. நலின் ஹேவகே - தொழிற்கல்வி பிரதி அமைச்சர்
5. ஆர்.எம். ஜயவர்தன - வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்
6. கமகெதர திஸாநாயக்க - புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்
7. டி.பி. சரத் - வீடமைப்பு பிரதி அமைச்சர்
8. ரத்ன கமகே - கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்
9. மஹிந்த ஜயசிங்க - தொழிலாளர் பிரதி அமைச்சர்
10. அருண ஜயசேகர - பாதுகாப்பு பிரதி அமைச்சர்
11. அருண் ஹேமச்சந்திர - வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்
12. அன்டன் ஜெயக்கொடி - சுற்றாடல் பிரதி அமைச்சர்
13. முகமது முனீர் - தேசிய ஒருமைப்பாடு பிரதி அமைச்சர்
14. எரங்க வீரரத்ன - டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்
15. எரங்க குணசேகர - இளைஞர் விவகார பிரதி அமைச்சர்
16. சதுரங்க அபேசிங்க - கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர்
17. ஜனித் ருவன் கொடித்துவக்கு - துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்
18. கலாநிதி நாமல் சுதர்சன - மகளிர் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர்
19. ருவன் செனரத் - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்
20. கலாநிதி பிரசன்ன குமார குணசேன - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்
21. டொக்டர் ஹன்சக விஜேமுனி - சுகாதார மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர்
22. உபாலி சமரசிங்க - கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்
23. ருவன் சமிந்த ரணசிங்க - சுற்றுலா பிரதி அமைச்சர்
24. சுகத் திலகரத்ன - விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்
25. சுந்தரலிங்கம் பிரதீப் - பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர்
26. சட்டத்தரணி சுனில் வதகல - பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்
27. கலாநிதி மதுர செனவிரத்ன - கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர்
28. கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும - நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர்
29. கலாநிதி சுசில் ரணசிங்க - காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்







# எமது ஆட்சிக் காலத்தில் இனவாதத்துக்கு இடமளிக்கமாட்டேன்

## கொள்கைப் பிரகடன உரையில் இலங்கை ஜனாதிபதி அனுரகுமார!



எமது ஆட்சிக் காலத்தில் இனவாதத்துக்கு ஒருபோதும் இடமளியேன் என 21ம் திகதி வியாழக்கிழமையன்று இலங்கைப் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற தனது கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி அனுரகுமார தெரிவித்தார்.

10 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் கன்னி அமர்வில் இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரக குமார திசநாயக்க தனது முழுமையான கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தினார். இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி, இனவாதத்துக்கு இடமளியேன் கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி அனுரகுமார!

"அனைத்து இன மக்களும் எம்மீது நம்பிக்கை கொண்டு அதிகாரத்தை வழங்கியுள்ளார்கள். அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தலில் ஆதரவளித்த, ஆதரவளிக்காத அனைவரையும் இலங்கை பிரஜைகள் என்றே நான் கருதுவேன் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாட்டில் இனி இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் இடமில்லை என்று ஜனாதிபதி கூறினார். மக்களால் வெறுக்கப்படும் நாடாளுமன்றம் மக்களை ஆள்வதற்கு தகுதியற்றது என்பதை இலங்கையின் அரசியல்வாதிகள் மற்றும் இனிமேல் அரசியலில் ஈடுபட உள்ளவர்கள் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆகவே மக்களால் விமர்சிக்கப்படும் பாராளுமன்றம் தோற்றம் பெற இடமளிக்க முடியாது என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். நாடாளுமன்றம் மக்களுடன் நெருக்கமாக செயற்பட வேண்டும் என்றும் இந்த பாராளுமன்றம் மக்களின் பரிசோதனையில் சித்தி பெற வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி உட்பட அனைவரும் நாட்டின் சட்டத்துக்கு அடிபணிய வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய குற்றங்களை முறையாக விசாரணை செய்து அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தகுந்த தண்டனைகளைப் பெற்றுக்கொடுக்கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த நஸ்ட ஈட்டைப் பெற்றுக்கொடுக்கவும் எமது அரசு தவறாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்தபின்னர் அடுத்த அமர்வுக்காக நாடாளுமன்ற அமர்வை டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

எதிர்வரும் 2025ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், குறை நிரப்பு பிரேரணை எதிர்வரும் மாதம் சமர்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக அரச சேவையாளர்களின் வேதனம் அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி இதன்போது உறுதியளித்தார்.

அத்துடன், வரவு - செலவு திட்டத்தின் ஊடாக அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு அதிகரிக்கப்படும் என்றும், வறுமை நிலையில் உள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக விசேட கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பணியாளர் மட்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தம் சனிக்கிழமை (23) கைச்சாத்திடப்படும் என்றும்.

இரு தரப்பு கடன் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. பிரதான கடன் வழங்குநர் நாடுகளுடன் பிரத்தியேக ஒப்பந்தம் வெகுவிரைவில் கைச்சாத்திடப்படும். நாணய நிதியத்துடனான செயற்திட்டத்தை இந்த ஆண்டுக்குள் பூரணப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கூறினார்."

Clean Sri Lanka கருத்திட்டத்துக்காக விசேட ஜனாதிபதி செயலணி அமைக்கப்படும். சிறந்த மாற்றத்துக்கு அரசியல் கட்டமைப்பு மாற்றமடைவதைப் போன்று, சமூக கட்டமைப்பும் மாற்றம் பெற வேண்டும் என்றும் தம்மீதும் அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை வைத்துள்ள அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலில் ஆதரவளித்த, ஆதரவளிக்காத அனைவரையும் இலங்கை பிரஜைகள் என்றே நான் கருதுவேன் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் இனி இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் இடமில்லை என்று ஜனாதிபதி கூறினார்.

தற்சமயம் நாடாளுமன்றத்தில் ஆற்றி வரும் தமது கொள்கைப் பிரகடன உரையின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்ற வகையில் தனியொரு கட்சி நாட்டை ஆள வேண்டும் என்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

எனவே, அனைத்து பிரஜைகளின் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு தாம் கடமைப்பட்டிருப்பதாகவும், அதற்கு பொறுப்புக் கூறுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும், இந்த தருணத்தில் இருந்து ஜனாதிபதி என்ற வகையில் மக்களின் பொறுப்பை முழுமையாக ஏற்றுக்கொள்வேன் எனவும், இனவாத அரசியலுக்கு மீண்டும் எமது நாட்டில் இடமில்லை எனவும் இதன்போது ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

மக்களால் வெறுக்கப்படும் நாடாளுமன்றம் மக்களை ஆள்வதற்கு தகுதியற்றது. ஆகவே மக்களால் விமர்சிக்கப்படும் நாடாளுமன்றம் தோற்றம் பெற இடமளிக்க முடியாது என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# பிரம்ரன் மாநகரில் புதியதோர் நம்மவர் உணவகம் "நம்ம கடை பிரியாணி"

## நகரபிதா பெற்றிக் பிறவுண் அவர்களின் கரங்களால் நாடா வெட்டப்பெற்று திறந்து வைக்கப்பெற்றது





தமிழ் மக்களும் இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட பல்லின மக்களும் அதிகளவில் வாழும் பிரம்ரன் மாநகரில் புதியதோர் நம்மவர் உணவகம் "நம்ம கடை பிரியாணி". என்னும் பெயரில் திறந்து வைக்கப்பெற்றுள்ள உணவகத்தின் பங்காளர்களின் அழைப்பிற்கு ஏற்ப பிரம்ரன் நகரபிதா பெற்றிக் பிறவுண் அவர்களின் கரங்களால் நாடா வெட்டப்பெற்று 20-11-2024 புதன்கிழமையன்று திறந்து வைக்கப்பெற்றது. அன்றைய தினம் நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்களும் சமூகத்தின் முக்கிய உறுப்பினர்களும் அங்கு கலந்து கொண்டு அனைவரையும் வாழ்த்திச் சென்றனர்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும். **Unit 11. 90 Eastern Ave. Brampton** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள "நம்ம கடை பிரியாணி" என்னும் இந்த உணவகத்தின் தொலைபேசி இலக்கம்:- 905 450 3054. சுவையான பிரியாணி வகைகளுக்கும் ஏனைய உணவு வகைகளுக்கும் உணவத்தை அழையுங்கள்"

## 'Centre for Youth Empowerment & Community Services' hosted Fundraising Dinner Gala in Scarborough on 17-11-2024

# ஸ்காபுறோவில் செயற்பாட்டு அலுவலகத்தைக் கொண்டு இயங்கிவரும் "Centre for Youth Empowerment & Community Services" நடத்திய இராப்போசன விருந்து





கடந்த நான்கு வருடங்களாக ஸ்காபுறோவில் செயற்பாட்டு அலுவலகத்தைக் கொண்டு இயங்கிவரும் **'Centre for Youth Empowerment & Community Services'** நடத்திய இராப்போசன விருந்து கடந்த 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோவில் உள்ள பாபா பேங்குவற் மண்டபத்தில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக ஒன்றாரியோ மாகாண அமைச்சரும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினருமான அவர்களும் மத்திய பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்காபுறோ வடக்கு பாராளுமன்ற உறுப்பினருமான அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

விழா நிகழ்ச்சிகளை மதிசயன் அவர்களும் செல்வி ஹம்சாயினி சாந்தகுமார் அவர்களும் தொகுத்து வழங்கினார்கள்.

**'Centre for Youth Empowerment & Community Services'** என்னும் இலாப நோக்கமற்ற இந்த அமைப்பின் இயக்குனர் சபை உறுப்பினர் மரியாம்பிள்ளை மரியராசா மற்றும் ராம் சங்கர் சிவநாதன் ஆகியோர் நிகழ்வை ஆரம்பித்து வைக்கும் வகையில் வருகை தந்த விருந்தினர்களில் அழைத்து மங்கல விளக்கேற்றி வைத்த பின்னர் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. அமைப்பின் தலைவர் சங்கர் நல்லதம்பி அவர்களும் அங்கு கலந்து கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய பின்னர் **'Centre for Youth Empowerment & Community Services'** அமைப்பிற்கு தொண்டர் சேவை ஆற்றும் இளைய தலைமுறையினருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். பாபு ஜெயகாந்தன் அவர்களின் குழுவினர் அங்கு மெல்லிசைப் பாடல்களை வழங்கி சபையோரை மகிழ்வித்தார்.

அன்றைய வைபவத்தில் **'Centre for Youth Empowerment & Community Services'** அமைப்பின் நோக்கங்களை நன்கு தெரிந்தும் புரிந்தும் கொண்ட அன்பர்களும் வர்த்தகப் பிரமுகர்களும் அங்கு சமூகமளித்து தங்கள் ஆதரவை வழங்கினார்கள். இதன் மூலம் இந்த அமைப்பு மேலும் தங்கள் சேவைகளை விஸ்த்தரித்துக் கொண்டு மக்கள் பயனடையும் வண்ணம் தொடர்ந்து சேவையாற்றவுள்ளதாக அங்கு உரையாற்றிய இயக்குனர் சபை உறுப்பினர்கள் தெரிவித்தார்கள்.



# ஸ்காபுறோ "நாத வீணா" மன்றத்தின் 2024ம் ஆண்டின் "இசை விழா" சிறப்பாக நடைபெற்றது



















கனடா - ஸ்காபுறோ நகரில் இசை ஆசிரியை ஸ்ரீமதி குகணேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களை குருவாகக் கொண்டு இயங்கிவரும் "நாத வீணா மன்றத்தின் 2024ம் ஆண்டின் "இசை விழா" சிறப்பாக கடந்த சனிக்கிழமை 16ம் திகதி மாலை இசைக் கலா மன்றத்தின் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவின் தொகுப்பாளராக திருமதி கோதை அமுதன் சிறப்பாக பணியாற்றினார்.
விழாவின் பிரதம விருந்திதராக உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்து இசை நிறுவனத்தையும் குருவையும் மாணவ மாணவிகளையும் வாழ்த்திச் சென்றார். பல வருடங்களாக இயங்கிவரும் வீணை வாத்திய இசை பயிற்சி நிறுவனம் என்ற வகையில் தனது நிறுவனத்தை சிறந்த முறையில் நடத்தி வரும் ஆசிரியை குகணேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களின் மாணவிகளின் பெற்றோரின் ஒத்துழைப்பு வழக்கம் போல அதிக-ளவில் இந்த வருடமும் இருந்தது என்று பிரதம விருந்தினர் அவர்கள் தனது குறிப்பிட்டார்.

ஆரம்ப வகுப்பு மாணவிகளின் இசை சமர்ப்பணம் நிகழ்ச்சிகள் தொடக்கம் சிரேஸ்ட வகுப்பு மாணவிகளின் வீணை இசைச் சமர்ப்பணம் வரையும் அழகா-கவும் இனிமையாகவும் நேர்த்தியாகவும் இருந்ததை தொடர்ச்சியாக கவனித்த இரசிகர் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டார்கள்.

அனைத்து வீணை இசை வாத்திய சமர்ப்பணங்களுக்கும் "மிருதங்க வாருதி" வாசுதேவன் இராஜலிங்கம் அவர்களின் மாணவர்கள் தங்கள் லய வாத்தியக் கருவிகள் மூலம் மெருகூட்டிச் சென்றார்கள் என்றால் அது மிகையாகாது.

மொத்தத்தில் அன்றைய ஆண்டு விழா நிகழ்ச்சி நிரலானது சில வேளைகளில் பார்வையாளர்களுக்கு இடையில் வீணைக் கச்சேரிகளை ரசிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்ற உணர்வு அனைவரிடத்திலும் இருந்திருக்க வேண்டும்.

---விமர்சனம்:- சத்தியன்




தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்
THE INTERNATIONAL CENTRE | இன்ரர்நஷனல் சென்ரர்
6900 Airport Road, Mississauga, Ontario L4V 1E8
மாவீரர் துயிலும் இல்லம்
மாவீரர் நாள்
நவம்பர் 27-2024 - புதன்கிழமை
எங்களுக்காகத் தமிழீழ மண்ணுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு
Tamil National Heroes Day
To Remember Our Heroes'
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism
றொறன்ரோ
27-11-2024
THE INTERNATIONAL CENTRE
6900 Airport Road
Mississauga
ON L4V 1E8
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி
மொன்றியல்
27-11-2024
புதன்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
ஒட்டாவா
27-11-2024
புதன்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON K2G 1W2
Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance

# மரண அறிவித்தல்



மலர்வு: 02 - 05 - 1950

உதிர்வு: 11 - 15 - 2024

## திரு. முருகேசு சிவசுப்பிரமணியம் (ராசன்)

(மாதனை, பருத்தித்துறை)

மாதனையைப் பிறப்பிடமாகவும், கரணவாய் மற்றும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு சிவசுப்பிரமணியம் அவர்கள் நவம்பர் 15, 2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இரத்தினசாமி-பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், மாலினியின் பாசமிகுக் கணவரும்,
துஷ்யந்தன், காலஞ்சென்ற அனுராதா, ரவிசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், பபிதா, ஜனனி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவானி, துசானி, ரிஷி, தியானா, கிறீனா, கேஷன் ஆகியோரின் பாசமிகுப் பேரனும்,
காலஞ்சென்ற மங்கயற்கரசி, சூரியமூர்த்தி, காலஞ்சென்ற கணேசமூர்த்தி, காலஞ்சென்ற செல்வதாஸ், செல்வரூபி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராஜேந்திரா, யமுனா, யோகேஸ்வரி, காலஞ்சென்ற பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் November 17, 2024 அன்று பார்வைக்காக வைக்கப்பட்டு, November 18, 2024 அன்று ஈமைக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: துஷ்யந்தன் (மகன்) 416-835-4017 ரவிசங்கர் (மகன்) 416-893-3216

# வடக்கு தமிழ் தேசியம் "திசை"மாறியதா...?




**"சிங்களக் கட்சியான தேசிய மக்கள் சக்தி வடக்கில் 5 பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றி பெரும்பான்மை பெற்றுள்ளதனால் வடக்கில் தமிழ் தேசியம் மரணித்து விட்டதாகவும், திசைமாறி விட்டதாகவும் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களில் உண்மையுள்ளதா? தமிழ் மக்கள் தமிழ்தேசியக்கட்சிகளை புறக்கணித்து விட்டனரா? தேசிய மக்கள் சக்திக்கு சென்ற வாக்குகள் யாருடையவை? வடக்கில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றது எவ்வாறு?"**

**------------------------------------------------------------ - கே. பாலா ----**

இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத்திற்காக நடந்து முடிந்த தேர்தலில் ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தமிழர் தாயகமான வடக்கு மாகாணத்தில் உள்ள 12 ஆசனங்களில் 5 ஆசனங்களைக் கைப்பற்றி பெரும்பான்மை பெற்றுள்ளமை மூலம் தமிழ் தேசியக் கொள்கையிலிருந்து வடக்குத் தமிழர் "திசை"மாறிவிட்டதாகவும் "தடம்"புரண்டு விட்டதாகவும் தமிழ் தரப்பினரால் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அதே நேரத்தில், வடக்கு தமிழர் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து வெற்றி பெற வைத்ததன் மூலம், "இனிமேல் சிங்கள அரசுகள் தமிழர்களை புறக்கணிப்பதாக உள்நாட்டிலோ சர்வதேசத்திலோ கூற முடியாது", "சிங்களக்கட்சி ஒன்று தமிழர்களின் நம்பிக்கையை வென்று வடக்கை கைப்பற்றியுள்ளதன் மூலம் நாட்டில் இனவாதம் இல்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" "தமிழர் தனி நாட்டையோ, சமஷ்டியையோ, வடக்கு, கிழக்கு இணைப்பையோ கேட்கவில்லை. அவர்கள் கேட்பது ஒருமித்த ஊழல் மோசடியற்ற நாடு. அதனையே வடக்கு தமிழர் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து வெளிப்படுத்தியுள்ளனர்" என சிங்களத் தரப்புகளினாலும் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

எனவே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வடக்கு மாகாணத்தில் உள்ள 12 ஆசனங்களில் 5 ஆசனங்களைக் கைப்பற்றியதன் மூலம் வடக்கு தமிழரிடம் "தமிழ் தேசியம்" மரணித்து விட்டதா? வடக்கு தமிழர் தமிழ் தேசியத்தை கைவிட்டு சிங்களக்கட்சிக்கு பின்னால் அணிதிரண்டனரா என்பது தொடர்பில் இந்தத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

வடக்கு மாகாணத்திலுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 8,99,268. இதில் யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டம் 5,93,187 வாக்காளர்களை கொண்டுள்ளது. நடந்து முடிந்த தேர்தலில் 3,58,079 பேர் வாக்களித்த நிலையில் 2,35,108 பேர் வாக்களிக்கவில்லை. அதேநேரம் வாக்களித்த 3,58,079 பேரில் 32,767 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன இதற்கமைய 3,25,312 பேரின் வாக்குகளே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, வன்னி மாவட்டம் 3,06,081 வாக்காளர்களை கொண்டுள்ள நிலையில், நடந்து முடிந்த தேர்தலில் 2,11,140 பேர் வாக்களித்த அதேநேரம் 94,941 பேர் வாக்களிக்கவில்லை. வாக்களித்த 2,11,140 பேரில் 15,254 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 1,95,886பேரின் வாக்குகளே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் 3,30,049 பேர் வாக்களிக்காத நிலையில் 48,021 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய 6 ஆசனங்களைக் கொண்ட யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 80,830 வாக்குகளைப்பெற்று 3 ஆசனங்களையும் இலங்கை தமிழரசுக்கட்சி 63,327 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 27,986 வாக்குகளைப்பெற்று 1 ஆசனத்தையும் ஊசி சின்னத்தைக் கொண்ட சுயேச்சைக்குழு 27,855 வாக்குகளைப்பெற்று 1 ஆசனத்தையும் கைப்பற்றின. இந்த தேர்தல் தொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 3,25,312 வாக்குகளில் 1,99,998 வாக்குகளை இந்த 4 தரப்புக்களும் பெற்றுக்கொள்ள, மிகுதி 1,25,314 வாக்குகளை 19 கட்சிகளும் 20 சுயேட்சைக் குழுக்களும் பங்கு போட்டுக்கொண்டன.

அதேபோன்று வன்னி தேர்தல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 39,894 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 32,232 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தையும் இலங்கை தமிழரசுக்கட்சி 29,711 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தையும் அகில ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி 21,102 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தையும் இலங்கை தொழிலாளர் கட்சி 17,710 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தையும் கைப்பற்றின. இந்த தேர்தல் தொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 195,886 வாக்குகளில் 1,40,649 வாக்குகளை இந்த 5 தரப்புக்களும் பெற்றுக்கொள்ள, மிகுதி 52,237 வாக்குகளை 15 கட்சிகளும் 26 சுயேட்சைக் குழுக்களும் பங்கு போட்டுக்கொண்டன.

வடக்கு மாகாணத்திலுள்ள மொத்த வாக்காளர்களான 8,99,268 பேரில் 5,69,219 பேர் வாக்களித்த நிலையில், 3,30,049 பேர் வாக்களிக்கவில்லை. வாக்களித்தவர்களிலும் 48,021 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய வடக்கு மாகாணத்தில் செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை 5,21,198.

இந்த 5,21,198 வாக்குகளில் தமிழ் தேசியக்கட்சிகளான இலங்கை தமிழரசுக்கட்சி 93,038 வாக்குகளையும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி 43,615 வாக்குகளையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 35,478 வாக்குகளையும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி 13,295 வாக்குகளையும் ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு 7496 வாக்குகளையும் பெற்றிருந்தன.

அதேபோன்று, ஈ.பி.டி.பி. 24,300 வாக்குகளையும் ஜனநாயக தேசிய கூட்டணி 22,370 வாக்குகளையும் பெற்றிருந்தன. இதற்கமைய தமிழ் தலைமைகளைக் கொண்ட இந்த 7 கட்சிகளும் 5,21,198 வாக்குகளில் 2,39,592 வாக்குகளை தமதாக்கிக்கொண்டன. அதுமட்டுமன்றி ஏனைய சிறுகட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் 95,664 வாக்குகளை பெற்றுக்கொண்டன. ஆக 5,21,198 வாக்குகளில் தமிழ் தேசியக் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் 3,35,286 வாக்குகளை கைப்பற்றிக் கொண்டன.

மிகுதியாகவுள்ள 1,85,912 வாக்குகளில் சிங்களத் தலைமையைக் கொண்ட தேசிய மக்கள் சக்தி 1,20,724 வாக்குகளையும் ஐக்கிய மக்கள் சக்தி 47,508 வாக்குகளையும் முஸ்லிம் தலைமையைக் கொண்ட இலங்கை தொழிலாளர் கட்சி 17,710 வாக்குகளையும் பெற்றுக்கொண்டன.

கடந்த 2020 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கில் சிங்களத் தலைமையைக் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி 51,447 வாக்குகளைப் பெற்ற நிலையில், இம்முறை 47,508 வாக்குகளையும் 2020 ஆம் ஆண்டு வடக்கில் 42,524 வாக்குகளைப் பெற்ற பொதுஜன பெரமுன இம்முறை 1387 வாக்குகளையும் 2020 ஆம் ஆண்டில் 7838 வாக்குகளைப்பெற்ற ஐக்கிய தேசியக்கட்சி இம்முறை 1562 வாக்குகளையும் மட்டுமே பெற்றுள்ள நிலையில் 2020 ஆம் ஆண்டு வடக்கில் 1515 வாக்குகளைப்பெற்ற தேசிய மக்கள் சக்தி இம்முறை 1,20,724 வாக்குகளை பெற்றமைதான் தமிழ்தேசியத்தை கேள்விக்குட்படுத்தியது.

தேசிய மக்கள் சக்தி கடந்த முறையை விடவும் இம்முறை அதிகமாகப் பெற்ற வாக்குகள் தமிழ் தேசியக்கட்சிகளின் வாக்குகள் அல்ல. கடந்த 2020 ஆம் ஆண்டு தேர்தலில் 1,82,883 வாக்குகளைப் பெற்ற இலங்கை தமிழரசுக்கட்சி, இம்முறை 93,038 வாக்குகளைப்பெற்று இழந்த 89,845 வாக்குகள், 2020 ஆம் ஆண்டு தேர்தலில் 63,535 வாக்குகளைப் பெற்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இம்முறை 35,478 வாக்குகளைப் பெற்று இழந்த 28,057 வாக்குகள், 2020 ஆம் ஆண்டு தேர்தலில் 44,716 வாக்குகளைப் பெற்ற தமிழ் மக்கள் தேசிய கூட்டணி இம்முறை 13,295 வாக்குகளைப் பெற்று இழந்த 31,421 வாக்குகள் என 1,82,130 வாக்குகளும் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணிக்கு 43,615 வாக்குகள், ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்புக்கு 7,496 வாக்குகள், ஜனநாயக தேசியக் கூட்டணிக்கு 22,370 வாக்குகள், சுயேச்சைக்குழு 17க்கு 27,855 வாக்குகள் என 1.01.336 வாக்குகள் சென்ற நிலையில் மிகுதி ஏனைய சிறு தமிழ் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் சென்றுள்ளன.

கடந்தமுறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் போட்டியிட்டு 49,373 வாக்குகளைப்பெற்ற அங்கஜன், இம்முறை 12,427 வாக்குகளைப் பெற்று இழந்த 36,946 வாக்குகள், கடந்த முறை 57107 வாக்குகளைப்பெற்ற டக்ளஸ் தேவானந்தா இம்முறை 24300 வாக்குகளைப்பெற்று இழந்த 32,807 வாக்குகள், கடந்த முறை 42,524 வாக்குகளைப்பெற்ற பொதுஜன பெரமுன இம்முறை 1387 வாக்குகளைப்பெற்று இழந்த 41,137 வாக்குகள் என 1.10.890 வாக்குகளுடன் மேலதிகமாக 10,000 வரையிலான வாக்குகள் மட்டுமே தேசிய மக்கள் சக்திக்கு சென்றுள்ளன. இந்த வாக்குகள் தமிழ் தேசியத்துடன் தொடர்பபட்ட வாக்குகள் அல்ல.

எனவே இலங்கை தமிழரசுக் கட்சியின் உள்வீட்டுப்பிளவுகளினால் வெறுப்படைந்தவர்களும், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டு தமிழர்களின் ஒற்றுமையை வெளிப்படுத்த தமிழ் மக்களும், சிவில் அமைப்புக்களும் முயன்றபோது ஜனாதிபதித்தேர்தலை பகிஷ்கரிக்கக்கோரி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் மேற்கொண்ட தீவிர பிரசாரத்தினால் கொதிப்படைந்தவர்களும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் "பார் பொர்மிட்" சர்ச்சையால் மனமுடைந்தவர்களும் தமது வாக்குகளை "சங்கு", "மாம்பழம்", "ஊசி" சின்னங்களுக்கு வழங்கியுள்ளனர்.

ஈ.பி.டி.பி., ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, பொதுஜன பெரமுன.ஐ, தே.க. ஆகிய கட்சிகளுக்கு கடந்த முறை வாக்களித்தோரே இம் முறை தமது வாக்குகளை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கியுள்ளனர். அதனால்தான் கடந்த முறை வெற்றி பெற்ற ஈ.பி.டி.பி.யின் டக்ளஸ் தேவானந்தாவோ, அங்கயன் இராமநாதனோ அல்லது பொதுஜன பெரமுன கட்சியோ இம்முறை ஒரு ஆசனத்தை கூடப் பெறவில்லை. இவர்கள் கடந்த முறை பெற்ற 3 ஆசனங்கள்தான் இம்முறை தேசிய மக்கள் சக்திக்கு சென்றுள்ளன.

இதன்மூலம் வடக்கு தமிழ் மக்களின் தமிழ் தேசிய உணர்வு மரணிக்கவில்லை. அவர்கள் "திசை" மாறவோ "தடம்" மாறவோ இல்லை. அவர்களின் வாக்குகள் தமிழ் தேசியத்திற்கே அளிக்கப்பட்டுள்ளன என்ற முடிவுக்கு தாராளமாக வரமுடியும்.

# கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் "குமரன் விளையாட்டுக் கழகம்" எடுத்த தீவிர முயற்சியினால் தமிழர் தாயகத்தில் வீடற்றவர்களாக இருந்த வசதியற்றவர்களுக்காக கட்டிக் கொடுக்கப்பெற்ற 35 வீடுகள்

## கனடா வாழ் கசியும் இதயம் படைத்த நல்லுங்களின் நிதிப்பங்களிப்போடு நிறைவேற்றப்பட்டுள்ள பிரமாண்டமான மனித நேயப் பணி

கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் "குமரன் விளையாட்டுக் கழகம்" எடுத்த தீவிர முயற்சியினால் தமிழர் தாயகத்தில் வீடற்றவர்களாக இருந்த வசதியற்றவர்களுக்காக கட்டிக் கொடுக்கப்பெற்ற 35 வீடுகள் அனைத்து பயனாளிகளிடமும் கையளிக்கப்பெற்றுள்ளன. மேற்படி வீடுகள் கையளிக்கும் வைபவங்களில் கனடாவிலிருந்து தமிழர் தாயகத்திற்குச் சென்ற மனித நேயம் கொண்ட அன்புள்ளங்களின் பிரதிநிதிகள் உவகையுடன் பங்குபற்றி கனடா திரும்பியுள்ளனர்.

கனடா வாழ் கசியும் இதயம் படைத்த நல்லுங்களின் நிதிப்பங்களிப்போடு நிறைவேற்றப்பட்டுள்ள மனித நேயப் பணி தொடர்பாக எவ்வித விளம்பரங்களும் மேற்கொள்ளாமல் அமைதியாக இருந்து இந்த அரும்பணியை பூர்த்தி செய்து விட்டதன் பின்னரேயே இந்த விடயத்தை கனடாவில் இயங்கும் பத்திரிகை நிறுவனங்களுக்கும் அதன் பிரதம ஆசிரியர்களுக்கும் அறியத் தந்த குமரன் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகிகளுக்கு கனடா உதயன் ஆசிரிய பீடத்தினர் தங்கள் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றனர்.

பயனாளிகளுக்கு கட்டிக் கொடுக்கப்பெற்ற வீடுகளைப் பெற்ற பயனாளிகளின் பெயர்களும் அவர்கள் வாழும் தமிழ் தாயகப் பகுதியும் மற்றும் கனடாவிலிருந்து இந்த மனித நேயப்பணிக்கு நிதி அன்பளிப்புக்களை வழங்கியவர்களின் பெயர்களும் கீழே காணப்படுகின்றன.

குமரன் விளையாட்டுக்கழகம் கனடா முதலாவது வீடு திரு.திருமதி. இராசரத்தினம் சிவபாக்கியம் ஞாபகார்த்தமாக கட்டப்பட்ட வீடு.
நிதி அனுசரணை வழங்கிய இராசரத்தினம் பாலகிருணன் (சின்ராசு) அவர்களுக்கு நிர்வாகத்தின் சார்பில் நன்றிகள்.

குமரன் விளையாட்டுக் கழகம் - கனடா கிளையின் ஒருங்கமைப்பில் திரு,திருமதி. நடராசா செல்வராணி ஞாபகார்த்தமாக நடராசா உமாகாந்த் அனுசரனையில் கட்டப்பட்ட இரண்டாவது வீடு.

குமரன் விளையாட்டுக்கழகம் கனடா மூன்றாவது வீடு சற்குருநாதன் ஞாபகார்த்தமாக நிதி அனுசரணை வழங்கிய கண்ணன் சற்குருநாதன் அவர்களுக்கு நிர்வாகத்தின் சார்பில் நன்றிகள்.
தர்மபுரத்தில் வசிக்கும் ஜோசப் ஜஸ்டின் குடும்பத்திற்கு திருமதி. துரைராஜா புவனேஸ்வரியின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டுத்திட்டத்தின் நான்காவது வீடு நிதி அனுசரணை வழங்கிய * திரு. துரைராஜா சி-றீதரன் அவர்களுக்கு நிர்வாகத்தின் சார்பில் நன்றிகள்.

வீடு அமைப்பு திட்டத்தின் ஐந்தாவது வீடு மாங்குளத்தைச் சேர்ந்த கார்த்திமுத்து மகேந்திரா குடும்பத்திற்கு திரு.திருமதி. சிவகுரு தையல்நாயகி ஞாபகார்த்தமாக அன்பளிப்பு கலாறஞ்ஜினி சிறீதரன் நிர்வாகத்தின் சார்பில்.

வீடு அமைப்பு திட்டத்தில் ஏழாவது வீடு கோண்டாவிலில் வசிக்கும் விஜயமலர் அவர்களுக்கு திரு. சின்னத்துரை சண்முகராசா ஞாபகார்த்தமாக அன்பளிப்பு சண்முகராசா சுதன்.

வீடு அமைப்பு திட்டத்தில் எட்டாவது வீடு சுதுமலையில் வசிக்கும் திரு. ஜெகநாதன் இரஞ்சித்குமார் அவர்களுக்கு திரு.திருமதி. இரத்தினசிங்கம் நல்லமுத்து * ஞாபகார்த்தமாக அன்பளிப்பு * இ.யோகராசா, இ.வசந்தன் - கனடா.


வீடு அமைப்பு திட்டத்தில் ஒன்பதாவது வீடு விசுவமடு கிளிநொச்சியை சேர்ந்த தர்மகுலசிங்கம் கோபினா அவர்களுக்கு வழங்கப்பட்டது.
திரு. தர்மகுலசிங்கம் பாஸ்கரன் ஞாபகார்த்தமாக அன்பளிப்பு பத்மநாதன் தேவபாலன்.

வீடு அமைப்பு திட்டத்தில் பத்தாவது வீடு பொன்னாலை தெற்கு சுழிபுரத்தில் வசிக்கும் வசந்தராஜா ரஞ்சிதன் அவர்களுக்கு திரு. பஞ்சலிங்கம் மயூரன் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.
அன்பளிப்பு பஞ்சலிங்கம் நிர்மலாதேவி குடும்பம்

வீடு அமைப்பு திட்டத்தின் 11வது வீடு மயில்வாகனபுறம் பிரம்மந்தாறு தர்மபுரத்தில் வசிக்கும் திரு இராசேந்திரன் கலையரசன் அவர்களுக்கு திரு. செல்லத்துரை, திரு.திருமதி. இரத்தினம் பரமேஸ்வரி ஞாபகார்த்தமாக அன்பளிப்பு செல்லத்துரை குடும்பம்
இரத்தினம் குடும்பம்

குமரன் விளையாட்டு கழகம் கனடா
வீடு அமைப்பு திட்டத்தின் 12வது வீடு
பொன்னாலை தெற்கு சுழிபுரம் பகுதியில் வசித்துவரும் நவரத்தினசாமி அஜந்தகுமார் அவர்களுக்கு அமரர் சுப்பையா சுந்தரலிங்கம் ஞாபகார்த்தமாக அன்பளிப்பு சுந்தரலிங்கம் சதீஸ்

*(தொடர்ச்சி 23 பக்கம்)*





# வடக்கில், 34 வருடங்களின் பின்னர் ஆலயம் ஒன்றிற்கு மக்கள் வழிபாட்டுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது





யாழ்ப்பாணம் - பலாலி, ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கே மக்கள் செல்ல 20-11-2024 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



கடந்த ஆட்சியில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆட்சியில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இந்த ஆலயம் உட்பட 6 ஆலயங்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 20ம் திகதி புதன்கிழமை தொடக்கம் பலாலி, வடக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு தினந்தோறும் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த ஆலயத்துக்கு ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பாதையூடாக செல்ல முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுவினர்

- ந.லோகதயாளன்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுவினர் வியாழக்கிழமையன்று (21.11.2024) இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜாவை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலான இந்திய அரசின் எதிர்கால செயற்பாடுகள், பங்களிப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சிவஞானம் ஸ்ரீதரன், கட்சியின் நாடாளுமன்ற குழுவின் கொரடாவும் பொதுச்செயலாளருமான மருத்துவர் ப.சத்தியலிங்கம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய இரா.சாணக்கியன், ஞா.ஸ்ரீநேசன், ச.குகதாசன், க.கோடீஸ்வரன், து.ரவிகரன், இ.சிறிநாத் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதிய அரசாங்கத்திற்கு இருக்கும் சவாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அனைவருக்கும் நினைவூட்டுகிறது



இறுதிப் போரின் இறுதிப் காலப்பகுதியில் பாரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதினைந்து வருடங்களாகியும் நீதி கிடைக்காத நிலையில், புதிய அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சியொன்று நினைவுபடுத்தியுள்ளது.

பல்லாயிரக்கணக்கான உயிர்கள் அழிக்கப்பட்ட இரத்தம் தோய்ந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லும் முயற்சிகளை மேலும் தீவிரப்படுத்த வடக்கின் தமிழ் கட்சியொன்று உறுதியளித்துள்ளது.

“மக்களுடைய முழு பலத்தையும் அணிதிரட்டி ஒரு சர்வதேச குற்றவியல் விசாரணையை நடத்துவதற்கு விசேடமாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்குரிய அழுத்தங்களையும் வேறு சர்வதேச விசாரணையை நடத்தக்கூடிய அரங்குகளுக்கு இலங்கையை கொண்டு செல்வதற்குரிய எங்களுடைய பயணம் இன்னும் தீவிரம் அடையும்.”

அண்மையில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 15,135 வாக்குகளைப் பெற்று மீண்டும் தமிழ் மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்ற ஆணையைப் பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், எதிர்வரும் ஐந்து வருடங்களுக்குள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தமிழ் தேசத்தினுடைய இன அழிப்பின் அடையாளமாக இருக்கக்கூடிய முள்ளிவாய்க்கால் மண்ணில் உரிமை பயணத்திற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சத்தியபிரமாணம் எடுத்த பின்னர் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்டகட்சியின் ஆதரவாளர்கள் குழுவுடன் நவம்பர் 19 முள்ளிவாய்க்காலுக்கு வந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

முன்னதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு 11,215 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவாகிய துரைராசா ரவிகரன் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுத் தூபியில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களை நினைவு கூர்ந்தார்.

கடந்த 15 வருடங்களாக தமது அரசியல் இயக்கம் முள்ளிவாய்க்காலில் நிறைவேறிய தமிழின படுகொலைக்கு, ஒரு சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையை உறுதியாக வலியுறுத்தி வந்துள்ளதாகவும, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுடைய பலவீனங்களை தமது கட்சி மக்களுக்கும் சர்வதேச மட்டத்திலும் எடுத்துக்காட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


இதுவரைக்கும் தமிழ் மக்களுடைய இனப்படுகொலைக்குரிய குற்றவியல் விசாரணைகள் எதுவும் நடைபெறாமல் இலங்கை அரசாங்கத்துக்கும் அதனுடைய இராணுவத்திற்கும், முப்படைகளுக்கும் 15 வருடங்களாக கால அவகாசமே வழங்கப்பட்டுள்ளதகாவும், இந்த விடயத்தில் மிகத்தீவிரமாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

ஒற்றையாட்சியை நிராகரித்து சுயாட்சி உரிமையை தேசிய அங்கீகாரத்துடன் முழுமையாக அனுபவிக்கக் கூடிய சமஷ்டித் தீர்விற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்காலத்தில் மிகத் தீவிரமாகச் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

“தமிழ் தேசத்துடைய இருப்பை உறுதிப்படுத்தக் கூடிய தேச அங்கீகாரத்துடன் சுயநிர்ணய சமஷ்டி தீர்வை நோக்கி மாத்திரமே நாங்கள் நகர முடியும் என்ற செய்தியை உலகத்திற்கு காட்டக்கூடிய வகையிலே எங்களது இயக்கம் மிகத் தீவிரமான வகையில் இனிவரும் காலங்களில் இயங்கும்.”

பொதுத் தேர்தல் வெற்றியின் பின்னர் அரசியலமைப்பை மாற்றும் அதிகாரத்தை பெற்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆளும் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, அதிகாரப் பகிர்வு தொடர்பில் தமிழ் மக்களுக்குத் தெரிவிக்கையில், மாகாண சபைகளை விட நியாயமான தீர்வொன்று முன்வைக்கப்படும் வரை மாகாண சபைகள் ஒழிக்கப்படமாட்டாது எனத் தெரிவித்தார்.

# உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் தியான மண்டப திறப்பு விழா!



யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் அமரர் சரசரட்ணம் புலந்திரலிங்கம் ஞாபகார்த்தமாக அவரது கணவர் திருவாளர் கந்தையா புலந்திரலிங்கம் அவர்களால் ரூபா 40 இலட்சம் பெறுமதியில் கட்டிக் கொடுக்கப்பட்ட தியான மண்டப திறப்பு விழா நிகழ்வு கல்லூரி அதிபர் செல்வி. இ. சுப்பிரமணிய குருக்கள் தலைமையில் 21-11-2024 வியாழன் காலை 9 30 மணியளவில் ஆரம்பமானது.

இதில் முதல் நிகழ்வாக ஆலயத்தில் இருந்து சுவாமி படங்கள் தியான மண்டபம் வரை எடுத்து வரப்பட்டு தியான மண்டப திறப்பு விழா இடம்பெற்றது.

தியான மண்டபத்தினை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலநிதி தம்பாபிள்ளை குகதாஸ், வடமராட்சி வலய கல்வி பணிப்பாளர் சத்தியபாலன், கட்டட நிதி நன்கொடையாளர் கந்தையா புலந்திரலிங்கம் ஆகியோர் இணைந்து சந்பிர்தாய பூர்வமாக நாடாவை வெட்டி திறந்து வைத்ததனை தொடர்ந்து சுவாமி படங்கள் மண்டபத்தில் வைக்கப்பட்டு சைவ சமய கிரியைகள் இடம் பெற்றதன் தொடர்ந்து பால் காச்சல் இடம் பெற்றது. அதனை தொடர்ந்து கல்வெட்டு பிரதம சிறப்பு விருந்தினர்களால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

தொடர்பு அரங்கில் கலை நிகழ்வுகள், பிரதம, சிறப்பு கௌரவ விருந்தினர்கள் உரைகள் இடம் பெற்றன. தொடர்ந்து பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் ஆகியோரும் தியான மண்டப கொடையாளர் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.






இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் தம்பாப்பிள்ளை குகதாஸ், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய கல்வி பணிப்பாளர் சத்தியபாலன், கௌரவ விருந்தினர்களாக கல்லூரி பழைய மாணவர் சங்க செயலாளர் திருமதி. செல்வநாயகி, கல்லூரி அபிவிருத்தி சங்க செயலாளர் தயானந்தராசா, ஆகியோரும், கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள், உட்பட பலரும் கபந்துகொண்டு சிறப்பித்தனர்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1121

## ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) கோயில், மட்டக்களப்பு

-------------

“ ஆசிந்து வாரணம் வாழி சேவல் வாழி
திறன் மகாகாளர் முதற் சேனை வாழி
சந்ரநுதற் பூரணைபுட்கலையும் வாழி
சதுர்வேத ஆச்சிரம தருமம் வாழி
மந்திர வேதியர் வாழி மகங்கள் வாழி
வான்மகளிர் கற்புநெறி மநுநூல் வாழி
எந்தையரி ஹரகுமர னடியார்ர் வாழி
எழிலணலப் பதியென்றும் வாழி வாழி. ”

குளிரும், கூதலும் நிறைந்த மார்கழி மாதத்திலே, மக்கள் மனதையும் உடலையும் ஆரோக்கியமாக வைத்திருக்க, நமது மூதாதையர் பல நெறிகளையும், விரதங்களையும் இக்காலப் பகுதியில் மக்கள் கடைப்பிடிக்கத்தக்க வகையிலே வகுத்து வைத்துள்ளர். இவற்றுள் ஒன்றாகக் காணப்படுவது மார்கழித் திருவெம்பாவை விரதமாகும். ஆதிகாலையில் எழுந்து நீராடி ஆலயம் செல்வது இவ்விரதத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஆரையம்பதி பரமநயினார் ஆலயத்திலும் மார்கழித் திருவெம்பாவைகாலத்தில், பத்து நாட்களும், காலைப்பூசையும், திருவிழாவும் நடைபெறும். இக்காலப்பகுதியில் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவை படிக்கப்படும். திருவிழாவின் முடிவில், திருவாதவூரடிகள் புராணபாராயணம் நிகழும். ஆருத்திரா தரிசனத்தன்று, கடலிலே சமுத்திரதீர்த்தம் நடைபெறும். சமுத்திரதீர்த்தம் நிறைவுபெற்று திரும்பி வரும்பொழுது, அடியார்களை மஞ்சள்நீரால் முழுக்காட்டுவர். சுவாமி கோயிலுக்குத் திரும்பியதும், திருப்பொன்னூஞ்சல் வைபவம் சிறப்பாக இடம்பெறும்.

இவற்றோடு தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரைக்கஞ்சி, சித்திரபுத்திரநாயனார் பூசை, நாகதம்பிரான் பொங்கல், ஆவணி விநாயகசதுர்த்தி, கார்த்திகைவிளக்கீடு, முதலிய காலங்களிலும் சிறப்பான பூசைகள் நிகழ்வதோடு, விசேட அபிஷேகங்களும், திருவிழாவும் நடைபெறும். ஆனி உத்தரத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்துநாள் அலங்கார உற்சவங்கள் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறும். ஆனிப்பரணியிலே கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் வருடாந்த மகோற்சவம், உத்தரத்தன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும். மதியநேரத்திலும், மாலையிலும் திருவிழாக்கள் நடைபெறும். இவற்றில் ஆரம்பத்தில் நடைபெறும் சில திருவிழாக்கள், ஆலயபரிபாலன சபையால் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இவற்றைக் கோயில் திருவிழாக்கள் என அழைப்பர். இந்நாட்களிலே சுவாமி எழுந்தருளி உள்வீதி வலம்வருவர். ஐந்தாம்நாள் நடைபெறும் திருவிழாவைக் குருக்கள் திருவிழா என அழைப்பர். இந்நாளிலிருந்து சுவாமி எழுந்தருளி உள்வீதியும், வெளிவீதியும் வலம்வருவது வழக்கமாகக் காணப்படுகின்றது.

ஆரையம்பதி பரமநாயினார் ஆலயத்தில் விசேடநாட்களிலும், திருவிழாக் காலங்களிலும் எழுந்தருள வாகனங்கள் பல காணப்படுகின்றன. குதிரை வாகனம், இடப வாகனம், யானை வாகனம், மயில் வாகனம், என்பன குறிப்பிடத்தக்கவையாகும். திருவிழாக்காலங்களிலே வெளிவீதி வலம்வரும்பொழுது விநாயகப்பெருமான் குதிரை வாகனத்திலும், சந்திரசேகரர் இடப வாகனத்திலும், பரமநயினார், பூரணை, புட்கலை சமேதராக யானை வாகனத்திலும், வள்ளி தெய்வயானை சமேதராக முருகப்பெருமான் மயில்வாகனத்திலும் எழுந்தருளி வலம்வருவர். இவ்வாகனங்கள் மலர்த்தோரணங்களாலும், மின்விளக்குகளாலும் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டுக் காணப்படும். அயற்கிராமங்களிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான மக்கள், இத்திருவிழாநாட்களில் இவ்வாலயத்திற்கு வந்து சாம்பவதீட்சை பெற்றுச்செல்வர்.

இவ்வாலயத்தின் திருவிழாக்காலம், மக்களுக்கு உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் கொடுக்கின்ற காலமாக அமையும். தீர்த்தோற்சவதினத்தன்று அதிகாலையிலேயே திருப்பொற்சுண்ணம் இடித்துக்கொண்டு, பல நூற்றுக்கணக்கான அடியார்கள் சூழ்ந்துவரக் கோயிலிலிருந்து புறப்பட்டு, சுவாமி கிழக்கு நோக்கி எழுந்தருளிச் செல்வார். கடற்கரையை அடைந்ததும் அங்கு அஸ்திரதேவருக்கு அபிஷேகம் நடைபெறும். அபிஷேகம் முடிந்தபின், சுவாமியை ஆலயத்திற்கு அழைத்து வருவர். வழிநெடுகிலும் தோரணங்கள் தூக்கி, மகரகும்பம் வைத்து சுவாமியை வரவேற்று மக்கள் சிறப்புச் செய்வர். சுவாமி கோயிலை வந்தடைந்ததும் யாகசாலை பிரிக்குங் கிரியைகள் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். அன்றிரவு திருப்பொன்னூஞ்சல் நடைபெற்று, கொடியிறக்கம் நிகழும். பிராயச்சித்த அபிஷேகம், வைரவர்பூசை என்பவற்றுடன் அடுத்தநாள் வருடாந்த மகோற்சவம் நிறைவுபெறும்.

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் பலவகைத் தத்துவநுட்பங்களை உள்ளுறையாகக் கொண்டவையாக விளங்குகின்றன. அத்தோடு மக்கள் உடலும் உள்ளமும் தூயவராகி மகிழ்வுடன் வாழவும் விழாக்களும் விரதங்களும் உதவுகின்றன. ஐயனாரின் தோற்றம் பற்றிப் புராணக் கதைகள் பலவாகக் காணப்பட்டபோதிலும், சிவவைணவ ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக, ஐயனார் வரலாறு விளங்குகின்றது. அரிகரனார் ஐக்கியம், சாதாரண நிலையில் புரிந்து கொள்ள முடியாத ஒரு நிலையாகக் காணப்பட்டபோதிலும், அருவ உருவமாய் காலத்திற்கும், குணத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளின் நியதியின்படி, காரிய காரணங்களுக்காக, அரிகரனார் ஐக்கியத்தின்மூலம் பிறந்த குழந்தையே, ஐயனார் என்பது ஞானிகள் கூற்றாகக் காணப்படுகின்றது. சபரிமலைக்கோவிலில் முன்பிருந்த ஸ்ரீ தர்மசாஸ்தா, பரசுராமர் பிரதிஷ்டை செய்த தர்மசாஸ்தா, மணிகண்டன், ஐயப்பன் அனைத்தும் ஹரிஹரசுதனின் அவதாரமாக விளங்குகின்றன.

**வளரும்...**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மக்களை அலைக்கழிக்காமல் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பது அரசாங்க அதிகாரிகள் கடமை – வடக்கு ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவிப்பு



அரச அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களின் தேவைகளை எவ்வளவு விரைவாக நிறைவேற்றிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அதைச் செய்து முடிப்பது அரசாங்க அதிகாரிகள் கடமை என வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் துறைசார் மீளாய்வுக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் புதன்கிழமை (20.11.2024) அன்று வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் உரையாற்றிய ஆளுநர், அலுவலர்கள் பொதுமக்களை தனிப்பட்ட ரீதியில் பழிவாங்கும் வகையில் செயற்படக்கூடாது என்றும், அரச அலுவலகங்களை நாடிவரும் பொதுமக்களின் தேவைகளை எவ்வளவு விரைவாக நிறைவேற்றிக் கொடுக்க முடியுமோ அவ்வாறு செய்து முடிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.



மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் ஆளுநர் அலுவலகத்துக்கு வருகின்றார்கள். அந்த நிலைமையை மாற்றியமைக்கும் வகையில் ஒவ்வொரு அலுவலகங்களும் வினைத்திறனாக பணியாற்றவேண்டும் என ஆளுநர் தெரிவித்தார்.

மேலும், விவசாயிகளின் நீண்ட காலப் பிரச்சினையான அவர்களின் உற்பத்திக்கான சந்தை வாய்ப்பு மற்றும் 10 சதவீதக் கழிவு தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் விவசாய உற்பத்திப் பொருள்களை சேகரிக்கக் கூடிய மையங்களை உருவாக்குவது தொடர்பிலும் ஆராயுமாறும் பணித்தார். அத்துடன் சந்தைகளில் பின்பற்றப்படும் கழிவு நடைமுறை தொடர்பாகவும் அவதானம் செலுத்துமாறு அறிவுறுத்தினார்.

உள்ளூராட்சி அமைச்சின் கீழான வீடமைப்புத் திட்டத்தில், மீளக்குடியமரும் மக்கள், இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் மக்கள், விதவைகளுக்கே முன்னுரிமையளிக்குமாறும் ஆளுநர் தெரிவித்தார்.

ஆளணிப்பற்றாக்குறை தொடர்பில் திணைக்களத் தலைவர்களால் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் மதிப்பீட்டாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில் 75 பேருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் 17,138 குடும்பங்களுக்கு காணி இல்லாத நிலைமை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதைப் பூச்சியமாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆளுநர் இங்கு குறிப்பிட்டார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வினைத்திறனை அதிகரிக்கும் வகையில் புதிய தலைவர் செயற்படுவார் என எதிர்பார்ப்பதாக குறிப்பிட்ட ஆளுநர், சட்டத்துக்கு முரணான வகையில் - தவறாகச் செயற்படும் பேருந்துகளின் உரிமங்களை உடனடியான இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பணித்தார்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநருடன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலர் செ.பிரணவநாதன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் ஒவ்வொரு மாவட்டங்களினதும் உதவி ஆணையாளர்கள் மற்றும் துறைசார் திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கைப் பொருளாதார வளத்தை உயர்த்தி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் திட்டங்கள் கொண்ட தனது முதலாவது பாராளுமன்ற உரையை வழங்கிய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க



இலங்கைப் பொருளாதார வளத்தை உயர்த்தி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் திட்டங்கள் கொண்ட தனது முதலாவது பாராளுமன்ற கொள்கைப் பிரகடன உரையை வழங்கிய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க அதில் முக்கியமாக இலங்கையின் பொருளாதார வளத்தை உயர்த்தி மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் நன்மைகளை உருவாக்குவதே என்பதை உறுதிபடத் தெரிவித்துள்ளார். இதற்கு முன்னைய ஜனாதிபதிகள் எவருமே இவ்வாறு தேசத்தின் மக்களது நலன்களை கருத்திற் கொண்டு உரைகளை ஆற்றவில்லை என இலங்கையிலும் வெளிநாடுகளிலும் அரசியல் விமர்சகர்கள் தங்கள் பதிவுகளில் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி அநுர குமார வியாழக்கிழமை ஆற்றிய கொள்கைப் பிரகடன உரை பின்வருமாறு அமைகின்றது.

எமது பொருளாதாரத்திற்கு பாரிய மூலோபாய எழுச்சி அவசியம். அதில் மூன்று அம்சங்கள் அடங்கும். எமது பொருள் சேவைகள் உற்பத்தித் துறையில் வேகமான முன்னேற்றம் அவசியம். பொருளாதார வளர்ச்சியில் அதிக பங்கை மேல்மாகாணம் வழங்குகிறது. அது போலவே ஏனைய பகுதி மக்களின் பங்களிப்பும் அதற்கு அவசியப்படுகிறது. பொருட்கள் சேவைகள் உற்பத்தியில் வேகமான முன்னேற்றம் அவசியம். பொருளாதாரத்தில் மக்களின் பங்களிப்பும் அவசியம். மக்களை கைவிட்டுச் செய்யும் பொருளாதார அபிவிருத்தியில் பயனில்லை. மக்களளை மனிதத் தூசிகளாக்கும் பொருளாதாரத்தில் பயனில்லை. அனைத்து பொருளாதார செயற்பாடுகளிலும் மக்களை பங்குதாரர்களாக்க வேண்டும்.

அனைத்து மக்களையும் பொருளாதாரத்தில் பங்குதாரர்களாக்காமல் அதன் நன்மை மக்களை சென்றடையாது. தேசிய நிதி சிறு குழுவின் கைகளில் மாத்திரம் இருக்குமானால் அது அரசாங்கத்திலோ பொருளாதாரத்திலோ ஸ்தீர நிலையை ஏற்படுத்தாது. இயற்கை வளங்கள் பொருளாதார உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. அனைவரும் இணைந்து பொருளாதாரத்தை கட்டியெழுப்புகையில் அது சிறு குழுவின் கரங்களுக்கு செல்லுமானால் பொருளாதாரப் பயனம் ஸ்தீரமடையாது. சமூகமும் வலுவடையாது. பொருளாதாரத்தின் பயன் நியாயமாக மக்களை சென்றடைய வேண்டும்.

சந்தைப் போக்கை நிர்வகித்து பொருட்கள் மற்றும் சேவைகளை தொடர்ச்சியாக நியாயமான விலையில் வழங்குவோம்.

சந்தையைக் கையாள்வது தொடர்பிலும் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எமது நாடு பாரிய சந்தையுள்ள இடமல்ல. சந்தையில் ஏகபோக உரிமை காணப்படுகிறது. நாளாந்த அரிசிப் பயன்பாடு 6500 மெற்றிக் தொன்களாகும். சிறிய சந்தைகளில் ஏகபோக உரிமை உருவாகலாம். பொருளாதார அடிப்படையில் எமது சந்தை நிர்ணயிக்கப்படவில்லை. ஏகபோக உரிமைப்படித்தான் எமது சந்தை நிர்ணயிக்கப்படுகிறது. பொருட்களின் விலைகளை ஏற்றி இறக்க அவர்களால் முடியும். நெல் விலையை கூட அவர்களால் நிர்ணயிக்க முடிகிறது. அரிசி விலையையும் அவர்களால் தீர்மானிக்க முடியும். இதனால் பொருட்கள் சேவைகளை பெற பாரிய கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மீளவும் சந்தையின் போக்கை மாற்றியமைக்க எதிர்பார்க்கிறோம். மக்களுக்கு நியாயமான முறையில் பொருட்கள் சேவைகளை வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அதனை அரசாங்கம் மீற முடியாது. போட்டித்தன்மை ஊடாக இதனை செய்ய முடியும். விலைகளை நிர்ணயிக்கலாம். ஆனாலும் சில துறைகளை மேற்பார்வை ஊடாக கையாளலாம். பாராளுமன்றத்தின் ஊடாக நிர்ணயச் சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.சந்தைகளிலுள்ள திரிபுநிலையை சீர் செய்ய அவை போதுமானது. அது தொடர்பான சட்டங்கள் போதுமானதா என பார்க்க வேண்டும். சில துறைகளை நாம் கையாள வேண்டும். சில துறைகள் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமானவை. அவை அரச பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும். வலுசக்தி சந்தையை கையாளுகையில் அரசின் பங்கும் இருக்க வேண்டும். அவை பொருளாதாரத்தில் முக்கியமானவை. இவற்றில் ஏற்படும் சில தடுமாற்றங்கள் பெரும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே அவ்வாறான துறைகளிலும் அரசாங்கத்தின் வகிபாகம் ஒன்று இருக்க வேண்டியதன் அவசியத்தை நாம் அறிந்துள்ளோம்.

அதே போன்று நிதித்துறை சுதந்திரமாக செயற்பட ஆரம்பித்தால் என்ன நடக்கும். மத்திய வங்கி மேற்பார்வை நிறுவனமாக செயற்படுகிறது. நிதிச் சந்தையிலும் அரச வகிபாகம் இருக்க வேண்டும்.

அடுத்து பரவலடைந்து காணப்படும் சந்தைகளுக்கு பதிலாக ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை அமைப்பை உருவாக்க வேண்டும். அதற்காக கூட்டுறவுச் அமைப்பை வலுவானதாக மாற்றியமைக்க எதிர்பார்க்கிறோம். சந்தையில் பலமான போட்டியாலராக கூட்டுறவுத்துறையை பயன்படுத்த இருக்கிறோம். பொருட்கள் மற்றும் சேவைகளை முன்னேற்றுவதற்காக சில துறைகளை அடையாளங் கண்டுள்ளோம்.

சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்ப துறையில் துரித அபிவிருத்தி

சுற்றுலாத் துறையில் பெரும் பாய்ச்சலை செய்யக்கூடிய இயலுமை தொடர்பில் அறிந்துள்ளோம். அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி 4 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளையும் 8 பில்லியன் டொலர் பெறுமதியான சுற்றுலா பொருளாதாரத்தை கட்டமைப்பதற்கும் எதிர்பார்த்திருக்கிறோம். 2018 இல் 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

அடுத்ததாக தகவல் தொடர்பாடல் துறை உலகின் அனைத்து தொழில் துறைகளிலும் தாக்கம் செலுத்துகிறது. தகவல் தொழில்நுட்பத்துறை வல்லுநர்கள் நாட்டுக்கு அவசியம். தற்போது எமது நாட்டில் 85 ஆயிரம் தகவல் தொழில்நுட்ப தொழில்துறையினர் மாத்திரமே உள்ளனர். அவர்களின் எண்ணிக்கையை 5 வருடங்களில் 2 இலட்சமாக அதிகரித்துக்கொள்ள எதிர்பார்க்கிறோம். தகவல் தொழில்நுட்பத்துறை ஏற்றுமதி வருமானம் குறைவாகவே உள்ளது. 5 பில்லியன் டொலர் வருமானத்தை பெறும் வகையில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஐந்து துறைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த திட்டமிட்டிருக்கிறோம். அதற்காக கல்வி,மொழி உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்துகிறோம்.

அமைவிடத்தின் பயனை பெற்று கப்பற்துறையை முன்னேற்ற நடவடிக்கை

இன்றும் உலக துறைமுகங்கள் கொழும்பு துறைமுகம் வரிசையில் முன்னணி வகிக்கிறது. அமைவிடத்தின் வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பலமான வர்த்தக கப்பல்துறை மத்திய நிலையமாக அதனை மாற்ற வேண்டும். சேவைப் பெறுநர்களுக்கு உரிய வகையில் சேவை கிடைக்கிறதா என்ற கேள்வி உள்ளது. எமது துறைமுகங்களின் இயற்கை அமைவிடமே எமது வலுவாகும். அதனால் எமது துறைமுகத்தை வலுவான பொருளாதார மையமாக மாற்றியமைப்பதற்கான பாரிய திட்டம் உள்ளது.

விவசாயத்துறையில் புரட்சிகர முன்னேற்றம்

நாட்டில் மிகப்பெரிய விவசாய துறை இருந்தாலும் கடனாளிகளான விவசாயிகளே இன்று நாட்டில் இருக்கின்றனர். விவசாய துறைக்காக நாம் பெருமளவில் முதலீடு செய்திருக்கிறோம். விவசாயத்துறை ஆய்வுகளுக்கு அதிக நிதி செலவிடப்படுகிறது. ஆனால் விவசாயிகள் கடன் சுமையில் சிக்கியுள்ளனர். சுகாதாரம், கல்வி, இருப்பிடம் அற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு, வறுமையின் பிடியிலும் சிக்கித் தவிக்கின்றமை பெரும் சமூக பிரச்சினையாகும். விவசாயத்துறை சார் வறுமை பாரிய சமூக அவலமாக மாறியுள்ளது. எனவே விவசாய துறையிலும் பெரும் பாய்ச்சலை மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அதற்காக விதைஉற்பத்தி நிலையங்களை மீள ஆரம்பிக்க வேண்டியது அவசியம். விவசாய சேவை நிலையங்களை வலுவூட்ட வேண்டும். இலங்கைக்குள் மாத்திரமின்றி ஏற்றுமதியை இலக்கு வைத்த விவசாய உற்பத்திகள் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே விவசாயத்துறையில் பாரிய பாய்ச்சலை மேற்கொள்வோம். விவசாயத்தை நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பகுதியாக மாற்றியமைக்க வேண்டும்.

ஹெக்டயாருக்கு 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட பசளை நிவாரணத்தை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளோம். மேலும் நிவாணம் வழங்க வேண்டிய துறைகளுக்கு வழங்க இருக்கிறோம்.

அதேபோல் மீன்பிடித்துறையை பலப்படுத்த வேண்டும். எரிபொருள் பிரச்சினையால் படகுகள் கரைகளில் கிடந்தன. படகுகளை மீள கடலுக்கு அனுப்புவதற்கு நிவாரணம் வழங்கியுள்ளோம். அதற்கான எமது நீரியல் வளங்களை பெறுமதிசேர் வளங்களாக மாற்றியமைக்கும் செயற்பாடுகள் குறித்து கவனம் செலுத்தியிருக்கிறோம்.

தனியார் துறை உதவியுடன் கனிய வளத்தினால் உச்சபயன் பெற்று பெறுமதிசேர்க்க நடவடிக்கை

கனிய வளங்களை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். தனியார் துறையினரையும் அந்த பணியில் கைகோர்த்துக்கொள்வோம். அது எமது பொருளாதாரத்தில் புதிய திருப்பு முனையாக அமையும் என்று நம்புகிறோம்.

அடுத்ததாக விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சித் துறை. உலகின் வளர்ச்சி கண்ட அனைத்து நாடுகளும் புதிய கண்டுபிடிப்புக்கான ஆய்விற்காக பெருமளவான நிதியை வரவு செலவு திட்டத்தில் ஒதுக்குகின்றன. புதிய உற்பத்தி மற்றும் விநியோகச் சேவைகளினால் மாத்திரமே புதிய சந்தை உருவாகும். எனவே விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் மூலமும் மிகப்பெரிய பாய்ச்சல் ஒன்றை செய்ய எதிர்பார்க்கிறோம். ஆசியாவில் பல நாடுகள் இந்தத் துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளன. இது சார்ந்த புதிய சந்தையில் பங்காளராக நாம் தவறிவிட்டோம். சம்பிரதாய முறைகளிலே தொடர்ந்து இருக்கிறோம். அந்த துறைசார் முக்கியஸ்தர்கள் பலரும் அதற்கான உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர். இந்தத் துறையில் பாரிய முன்னெற்த்தை எட்ட எதிர்பார்க்கிறோம்.

டிஜிட்டல் மயமக்கல் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளோம். இலங்கையை டிஜிட்டல் மயமாக்கும் திட்டத்திற்கு பங்களிக்க ஹான்ஸ் விஜேசூரிய முன்வந்துள்ளார். நாட்டை முன்னேற்றுவதில் டிஜிட்டல்மயமாக்கல் முக்கியமானது. அந்த இலக்குகளை அடைந்துகொள்ள அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப்புடன் செயலாற்றும்.


அதன் படி நாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டை எட்டிய ஆட்சியே கிடைக்கும் என்பதை கூறியிருந்தோம். அதனால் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டினை எட்டியுள்ள ஒரு நாட்டிற்கு அந்த ஒப்பந்தத்தை விடுத்துச் செல்ல முடியாது என்பதை நாம் புரிந்துகொண்டுள்ளோம்.

அதன்படி சர்வதேச நாணயநிதிய உடன்பாடுகளுக்கு அமைவாக பொருளாதாரத்தை கையாள்வதாக பொதுத் தேர்தலில் மக்களுக்கு உறுதியளித்தோம். அதன் படி பல செயற்பாடுகளை முன்னெடுக்கிறோம். தற்போது மூன்றாவது மீளாய்வுக் கூட்டம் தாமதமாகியுள்ளது. இதனை செப்டம்பர் மாதம் ஆரம்பிக்க வேண்டியிருந்தது. மூன்றாவது மீளாய்வுக் கூட்டத்தை ஆரம்பிக்க சில காலம் பிடித்தது. பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் கடந்த 17 ஆம் திகதி சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்தனர். கடன் மறுசீரமைப்பு குறித்து நீண்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இந்த வாரத்திற்குள் பணியாளர் மட்ட ஒப்பந்தத்தில் 23 ஆம் திகதி கைச்சாத்திட முடியும் என திர்பார்க்கிறோம். சர்வதேச நாணய நிதியத்துடனான பயணத்தில் அதில் முக்கியமாக முன்னெடுப்பாகும். கடன் மறுசீரமைப்பும் அதனுடனான உடன்பாடுகளில் அடங்குகிறது. நாம் ஆட்சியை பொறுப்பேற்ற போது கடன்மறுசீரமைப்பு உடன்பாடு எட்டப்பட்டிருந்தது.

வர்த்தக சந்தையில் பிணைமுறி தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஜனாதிபதித் தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன்னர் அதற்கான உடன்பாடுகள் எட்டப்பட்டதாக ஊடகங்களின் ஊடாக அறிந்தோம். இருவருடங்களுக்கு மேலாக பேச்சுகள் நடைபெறுகிறது.

***(தொடர்ச்சி 26 பக்கம்)***


ஈழமுரசு
ஈழமுரசும்
கனடா வாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும்
தமிழீழத் தேசிய தலைவர்
மேதகு வே. பிரபாகரன்
அவர்களின்
70
தலைவர்
பிறந்தநாள்
அதுவே
தமிழர்
நிமிர்ந்த நாள் !
வீழ்ந்து விடாத
வீரம்
மண்டியிடாத
மானம்
இருப்பாய்
தமிழா
நெருப்பாய் !
AAROSAI
"WHERE MUSIC BEGINS..."
அகவை விழா
மாபெரும் எழுச்சி விழா
2024
நவம்பர்
26
செவ்வாய்க்கிழமை
மாலை
5 மணி
TORONTO
METROPOLITAN CENTRE
3840 Finch Ave East
Scarborough, ON, M1T 3T4
(Kennedy & Finch)
MONTREAL
LE CHATEAU ROYAL
3500 Bd du Souvenir
Laval, Montreal, QC,
H7V 1X2, (514) 660-5891
ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவருக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்
தொடர்புக்கு: 289-277-5920

*(18 பக்கத் தொடர்ச்சி)*

வீடு அமைப்பு திட்டத்தின் 13வது வீடு
இணுவிலில் வசிக்கும் நடராசா சிவகுமார் அவர்களுக்கு
அமரர் செல்லையா கந்தையா ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு கந்தையா பஞ்சலிங்கம்

வீடு அமைப்பு திட்டத்தின் 14வது வீடு வட்டுக்கோட்டை வடக்கு சித்தங்கேணியில் வாழ்ந்துவரும் செல்லையா சரஸ்வதி அவர்களுக்கு அமரர்கள் இராசையா-பரமேஸ்வரி ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு இராசையா சீறீகாந்தன்

குமரன் விளையாட்டுக் கழகம் - கனடா
எமது வீடமைப்புத் திட்டத்தின் 15,16,17,18,19 ஆவது வீடுகள் மிருசுவில் பகுதியில் விழிப்புணர்வு அற்ற ஐந்து குடும்பங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.
ஐந்து வீடுகளும் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
15வது வீடு
பாஸ்கரன் - சுதர்ஷினி ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு பாஸ்கரன் குடும்பம்

குமரன் விளையாட்டுக் கழகம் - கனடா
எமது வீடமைப்புத் திட்டத்தின்.
16வது வீடு
பாலசிங்கம் கண்மனி ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு பாலசிங்கம் குடும்பம்

குமரன் விளையாட்டுக் கழகம் - கனடா
எமது வீடமைப்புத் திட்டத்தின்
17வது வீடு
தேவிகா ஜெயக்குமார் ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு ஜெயக்குமார் செல்வரத்தினம்

குமரன் விளையாட்டுக் கழகம் - கனடா
எமது வீடமைப்புத் திட்டத்தின்
18வது வீடு
அன்பளிப்பு கருனாநிதி ரவீந்திரன், தில்லைநாயகம் ரூபகுமார்

எமது வீடமைப்புத் திட்டத்தின் 15,16,17,18,19 ஆவது வீடுகள் மிருசுவில் பகுதியில் விழிப்புணர்வு அற்ற ஐந்து குடும்பங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.
ஐந்து வீடுகளும் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
19வது வீடு
அருளம்பலம் - இரத்தினம்மா ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு பிள்ளைகள்
வீடு அமைப்பு திட்டத்தின் 20வது வீடு
மாங்குளம் பகுதியில் அமரர்கள் மகாதேவா - சோமசுந்தரம் ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு சிவா - இரஞ்சன் (கொக்குவில்)

வீடு அமைப்பு திட்டத்தின் 21வது வீடு
நெடுங்கேனி பகுதியில் அமரர்கள் வீரசிங்கம் செல்லம்மா - ரமேஷ் ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு வீரசிங்கம் வினாயகர்

குமரன் விளையாட்டுக் கழகம் - கனடா
22வது வீடு
பஞ்சரத்தினம் மகேஸ்வரி ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு பிள்ளைகள்

குமரன் விளையாட்டுக் கழகம் - கனடா
எமது வீடமைப்புத் திட்டத்தின் 22,23,24,25,26 ஆவது வீடுகள் அம்பாறை மாவட்டம் காயத்திரிபுரம் பகுதியில் ஐந்து குடும்பங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.
ஐந்து வீடுகளும் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
24வது வீடு
பொன்னையா செல்வரட்னம் மற்றும் இரத்தினம் கனகம்மா ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு சுகுமார் - சுமதி

குமரன் விளையாட்டுக் கழகம் - கனடா
25வது வீடு
சீவரத்தினம் துரையம்மா ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு கேதீஸ் சீவரத்தினம்

குமரன் விளையாட்டுக் கழகம் - கனடா
26வது வீடு
அன்பகம் 2 அன்பளிப்பு Royal Property நிராகுலன்

குமரன் விளையாட்டுக் கழகம் - கனடா
வீடு அமைப்பு திட்டத்தின் 27வது வீடு
ஓமந்தை இளமருதங்குளம் பகுதியில் வழங்கப்பட்டது.
கனகராசா அரியரட்னம் ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு அரியரட்னம் தெய்வேந்திரம்

வீடு அமைப்புத் திட்டத்தின் 28வது வீடு
முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு மூங்கில் ஆறு பகுதியில் வசித்துவரும் அலோசியஸ்பிள்ளை அவர்களுக்கு அமரர்களான திரு.திருமதி. வீரசிங்கம் ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு வீரசிங்கம் சந்திரன்

வீடு அமைப்புத் திட்டத்தின் 29 வீடு
கிளிநொச்சி பகுதியில் வசித்துவரும் நிரயுயன் அவர்களுக்கு அமரர்களான திரு.திருமதி. இராசையா - கண்மனி ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு இராசையா மகேஸ்வரன்

வீடு அமைப்புத் திட்டத்தின் 30 வீடு
கிளிநொச்சி பகுதியில் வசித்துவரும் - அவர்களுக்கு அமரத்துவமடைந்த கிருஸ்னபிள்ளை நடராசா ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு நடராசா ஜெயகாந்

வீடு அமைப்புத் திட்டத்தின் 31வது வீடு
கோண்டாவில் பகுதியில் வசித்துவரும் சூரியகுமாரன் சங்கீதா அவர்களுக்கு அமரத்துவமடைந்த சுலோசனாதேவி மகாலிங்கம் ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு மாகலிங்கம் - பிள்ளைகள்

வீடு அமைப்புத் திட்டத்தின் 32 ஆவது வீடு அக்ராயன்குளம் கிளிநொச்சியில் வசித்துவரும் கதிரன் தேவராசா அவர்களுக்கு அமரத்துவமடைந்த பீட்டர்போல் ஞாபகார்த்தமாக அன்பளிப்பு Rexy குடும்பம்

வீடமைப்புத் திட்டத்தின் 33வது வீடு அக்ராயன்குளம் கிளிநொச்சியில் வசித்துவரும் ஞானராசா ராஜ்குமார் குடும்பத்திற்கு அமரத்துவமடைந்த கந்தையா தவனேந்திரம் ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு குடும்பத்தினர்

வீடு அமைப்புத் திட்டத்தின் 34வது வீடு அக்கராயன்குளம் கிளிநொச்சி பகுதியில் வசித்துவரும் விக்னேஸ்வரன் குடும்பத்திற்கு அமரத்துவமடைந்த கந்தசாமி அன்னபூசனி அம்மா ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு பிள்ளைகள்

வீடு அமைப்புத் திட்டத்தின் 35வது வீடு புதுகுடியிருப்பு இரண்டாம் வட்டாரத்தில் வசித்து வரும் திரு.திருமதி. ஜெயராச குடும்பத்திற்கு அமரத்துவமடைந்த திருமதி. ஞானம்மா துரையப்பா ஞாபகார்த்தமாக
அன்பளிப்பு சவுத் ஏசியன் சூப்பர் மார்க்கெட்

மேற்படி வீட்டுத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது தொடர்பான பத்திரிகையாளர்களுக்கு அறிவிக்கும் நிகழ்வு கடந்த 15-11-2024 அன்று கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்றது. நிகழ்வை திரு. தேவா சபாபதி தொகுத்து வழங்கினார்.

# மாவீரர் நாள்
# (நிலைமண்டில ஆசிரியப்பா)

*மாவீரர் என்போர் மரணத்தை வென்றோர்.*
*காவிய நாயகர் கடமையைச் செய்தோர்.*
*சாவினை நெஞ்சிற் சரமாய்ச் சுமந்தோர்.*
*ஆவியை எமக்கு அளித்துச் சென்றோர்.*
*இளமைக் காலத்தை இனத்துக்காய்த் துறந்தோர்.*
*அழகான வாழ்வை அர்ப்பணம் செய்தோர்.*
*களமாடி எமக்காய்க் களத்தில் வீழ்ந்தோர்.*
*வளமான எதிர்காலம் விதையாய்த் தந்தோர்.*
*தலைவனின் ஆணையை தலைமேல் சுமந்தோர்.*
*விலையிலா உயிரை வீரமாய்த் துறந்தோர்.*
*அலைபோல் வந்த அன்னியர் எதிர்த்தோர்.*
*மலைபோல் நின்று மறித்து அழித்தோர்.*
*சாதிக்காய்த் துடிக்காமல் சாதிக்கத் துடித்தோர்.*
*சாதிப்ப தொன்றையே சபதமாய் ஏற்றோர்.*
*ஆதிக்க அரக்கரை அடியோடு அழித்தோர்.*
*பாதிப்பு மறந்து புலியாய்ப் பாய்ந்தோர்.*
*தாயகம் காக்க தானையாய்ச் சென்றோர்.*
*மாயன் செல்லில் மாண்டு வீழ்ந்தோர்.*
*தாயவள் பெருமையைத் தரணியிற் பொறித்தோர்.*
*தூய வாழ்வைத் தந்து சென்றோர்.*
*விண்ணை நோக்கி விரைந்த போதும்*
*மண்ணில் நாங்கள் மறப்போமா? உம்மை*
*கண்ணில் கண்ணீர் கசிந்து வந்தாலும்*
*அண்டம் முழுவதும் அகல்விளக்(கு) கேற்றுவோமே!*

*மாயன் – – – – – – – – வஞ்சகன்*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

# இவ்வார ராசிபலன்

**22-11-2024 வெள்ளி தொடக்கம் 28-11-2024 வியாழன் வரையும்**




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**மேஷம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். வம்பு தும்புகள் ஒழியும். பூர்வீக சொத்து சேரும். உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். கனவு தொல்லை உண்டு. தேவைகள் பூர்த்தியாகும். எளிமையை விரும்புவீர்கள். இனிய காதல் உருவாகும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். புதிய வாய்ப்புத்தேடி வரும். இனிய தகவல் வந்து சேரும். புதியத்தொழில் அமையும். உடல்சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உடல் மனநிம்மதி தரும். பாராட்டுப் பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. செல்வாக்கு உயரும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். நினைத்த தொழில் அமையும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பான செய்திகள் வரும். புதிய முதலீடு தவிர்க்கவும். போட்டிகள் நீடிக்கும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். புதிய நட்பை தவிர்க்கவும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச் செய்தி வரும். மாணவர்கள் உற்சாகம் கூடும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். அந்நிய தேசப்பயணம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: *2,7,8,1*

அதிர்ஷ்ட நிறம்: ஆழந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,L




**ரிஷபம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். செய்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மனஆரோக்கியம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். சுபகாரியம் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். புத்தி சாதுர்யம் பெருகும். தந்தை உடல்நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு தாமதமாகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளால் தாமதம் ஏற்படும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். இல்லத்தில் அமைதி கூடும். நீண்ட நாள் நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. பிரியமானவர்களை சந்திப்பீர்கள். சுபகாரியம் கைகூடும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். பொது வாழ்வில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: *7,4,5,1*

அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K




**மிதுனம்:** மனதில் இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. காதலர்கள் தம்பதியாவார்கள். கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. வஸ்திர தானம் வளம் சேர்க்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். இடமாற்றம் நன்மை தரும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் தரும். தன வரவில் தடங்கல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. மனைவி உடல்நலம் பாதிக்கும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். பிரயாணம் ஏற்படும். உணவு விடுதி லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். உலோகத் தொழில் உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ சுப்ரமணியர், அதிர்ஷ்ட எண்: *8,4,3,2*

அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**கடகம்:** பிள்ளைகளால் சொத்து சேரக்கூடிய வாரம். தாராளமான தனவரவு உண்டு. கட்டிடத்தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். பித்தளைத் தொழில் லாபம் தரும். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புகள் அடங்கும். சிறப்புக்கள் சேரும். பொறுப்புக்கள் கூடும். குடும்ப அன்யோன்யம் கூடும். வாய்ப்புகள் தேடி வரும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். கையிருப்பு கரையும். உடல்நலம் சீராகும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். மாணவர் திறமை பளிச்சிடும். சிறிய இடையூறு ஏற்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். சுய பலம் கூடும். தொழில் வழி தொல்லை குறையும். பயணம் ஆதாயம் தரும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் குதூகலம் கூடும். தங்க நகைகள் சேரும். இடையூறுகள் அதிகமாகும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். புகழ்ச்சி அதிகரிக்கும். வெளியூர் பயணம் ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். ஆரோக்கியம் சீராகும். குடும்ப மேன்மை தரும். எந்திர தொழிலில் லாபம் உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. வாகன அபிவிருத்தி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: *4,2,7,9*

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,K




**சிம்மம்:** நம்பிக்கைக்குரியவர்களை சந்திக்கும் வாரம். வழக்குகள் வெற்றி தரும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். கடன் சுமை குறையும். கமிஷன் தொழில் கவனம் தேவை. ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். விடாமுயற்சி அவசியம். போட்டிகள் மறையும். நல்லோர்களின் நட்பு கிட்டும். நிதி நிலைமை சீராகும். வழிபாடு மாற்றம் தரும். முயற்சிகள் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நிர்வாகத்தில் நிதானம் தேவை. காதல் கைகூடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சியில் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. அணிகலன் சேரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தொல்லைகள் ஒழியும். திடீர் பயணம் ஏற்படும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: *5,4,1,9*

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,F




**கன்னி:** இக்கட்டான சூழ்நிலைகள் அகலும் வாரம். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பண விரயம் உண்டு. சுபகாரியம் கைகூடும். அணிகலன் சேரும். ஆலோசனை பலன் தரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தொல்லைகள் ஒழியும். புதிய எண்ணம் நிறைவேறும். நண்பர்களால் நன்மையுண்டு. வருத்தங்கள் மறையும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். கல்வியில் கவனம் தேவை. காதல் கசக்கும். வழக்குகள் சாதகமாகும். தொழில் மேன்மை உண்டு. விவசாயம் பலன் அளிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பயணத்தடை ஏற்படும். சோம்பல் அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறும். வேலை வாய்ப்புக் கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பாதிப்புகள் அகலும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். உடல்நலம் கவனம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: *3,7,5,1*

அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H




**துலாம்:** பெருமைகள் சேரும் வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பழைய கடன் வசூலாகும். பயணம் அனுகூலம் தரும். வாகனச்செலவு ஏற்படும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். உறவினர்களால் நன்மை உண்டு. காரியத்தடை ஏற்படும். கடன் சுமை அதிகரிக்கும். மாணவர்கள் கவனம் தேவை. கலைத்துறையில் திருப்பம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. பொருள் இழப்பு ஏற்படும். போட்டிகள் உருவாகும். மெத்தனப்போக்கு விலகும். விருந்தினர் வருகை உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். தகுதிகள் உயரும். புதிய எண்ணங்கள் உருவாகும். கவலைகள் ஒழியும். கடன் பிரச்சனைகள் அகலும். சுபச்செலவு அதிகரிக்கும். அரசு வழி ஆதாயம் உண்டு. விவசாயம் பலன் தரும். புதிய நட்பு ஏற்படும். அந்தஸ்து உயரும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத் துறையில் வெற்றி கிட்டும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். கலைத்தொழிலில் நிலை உயரும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். பொறுப்புக்களால் சிறப்பு சேர்க்கும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். மறைமுக எதிர்ப்பு விலகும். பணிவான பேச்சுகள் தேவை. சச்சரவுகள் அகலும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: *5,3,7,9*

அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். நன்மைகள் பெருகும். தொழில் லாபம் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பொருளாதாரம் உயரும். சிந்தனைகள் மேலோங்கும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. உதவும் குணம் அதிகரிக்கும். வணிகத்தொழில் வளம் கூடும். உணவுத்தொழில் உயர்வு தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. தொலைபேசி தகவல் தொல்லை தரும். பங்குத்தொழில் பணம் தரும். பழைய பாக்கி வசூலாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பாராட்டுக்கள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். ஆடை, அணிகலன் சேரும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை நீங்கும். மன சந்தோஷம் அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். பெருமைகள் சேரும். திட்டமிட்ட செயல் தேவை. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. ஞாபக மறதி ஏற்படும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். பணப்பற்றாக்குறை நீங்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. எள் தானம் ஏற்றம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: *5,4,1,9*

அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C

**(தொடர்ச்சி 25 பக்கம்)**

# இவ்வார ராசிபலன்


(24 பக்கத் தொடர்ச்சி)

**தனுசு:** வறுமைகள் விலகும் வாரம். விவசாயிகள் பயன்பெறும். தெளிவான முடிவுகள் உதயமாகும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். நண்பர்கள் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் தவிடுப்பொடியாகும். கௌரவத்தில் கவனம் தேவை. புதிய சிந்தனை உதயமாகும். கண்ணாடி பொருட்கள் சேதமாகும். கலக்கமான மனநிலை காணப்படும். பிரார்த்தனையால் பலன் உண்டு. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். அதிகாரம் உயரும். அணிமணிகள் சேரும். வாகன யோகம் உண்டு. கட்டிட தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். தேச பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். பொருளாதாரம் மேம்படும். திருமண தீபம் சுடர்விடும். கடன் பாக்கிகள் வசூலாகும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. உழைப்பில் கவனம் தேவை. சுபச்செலவுகள் அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மனநெருக்கடிகள் தீரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். பணியில் பாராட்டு கிட்டும். உடல்நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். கணவன், மனைவி உறவு மேம்படும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K

**மகரம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும். பெண்களால் பெருமை உண்டு. எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். திடீர் பயணம் ஏற்படும். மதிப்பு உயரும். மனைவி பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். உடல் பொலிவு கூடும். பூமியால் லாபம் உண்டு. குடும்பத்தில் குழப்பம் நீங்கும். சுபச்செலவு அதிகரிக்கும். நட்டமில்லாமல் திட்டங்ள் நிறைவேறும். சொந்த முயற்சிகள் பலன் கொடுக்கும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். ஞாபக மறதி ஏற்படும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. உதவிகள் கிட்டும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சியில் வெற்றி பெறும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வசதிகள் பெருகும். புதுமுயற்சிகள் பலன் அளிக்கும். பங்குச்சந்தை மாற்றம் தரும். நல்லோர்கள் நட்பு கிட்டும். சொத்துக்கள் சேரும். உத்யோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். கவனமுடன் செயல்பட வேண்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,7,9
அதிர்ஷ்டநிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Y

**கும்பம்:** திட்டம் வெற்றி பெறும் வாரம். யோகமான காலம். எதிர்பார்ப்பினால் பலன் உண்டாகும். கலை ஆர்வம் கூடும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும். தாய்வழி உறவு நன்மை தரும். பயணம் தடைப்படும். இடமாற்றம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். பல் வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. வெற்றி சீக்கிரம் கிட்டும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை அமையும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். பூமியால் லாபம் அடைவீர்கள். புதிய பொருள் சேரும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். பாராட்டுக்கள் கிடைக்கும். மற்றவர் தொல்லைக் குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். கலைத்தொழிலில் திருப்பம் தரும். சமூக சேவை செய்ய முன் வருவீர்கள். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள். முகப்பொலிவு உண்டாகும். உணவு பிரியம் அதிகரிக்கும். வாய்ச்சொல் பலன் உண்டு. தொழில் வளம் கூடும். காதலில் புரிந்துணர்வு இருக்கும். மருத்துவத்துறையில் ஆர்வம் கொள்வீர்கள். உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 8,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,R

**மீனம்:** காரியத்தில் வெற்றி காணும் வாரம். ஆதாயம் பெருகும். நிர்வாகத் திறமை கூடும். வீடு, மனை யோகம் உண்டு. அரசாங்க அனுகூலம் உண்டு. இனிய எண்ணம் உதயமாகும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்கள் திறமை பளிச்சிடும். நினைத்தக் காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கலை ஆர்வம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். வீண் செலவு அதிகமாகும். தடைகள் விலகும். தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும். பொன், பொருள் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிதான காரியம் நடைபெறும். குடும்ப மகிழ்ச்சி இருமடங்காகும். சகோதரியால் லாபம் உண்டு. ஒப்பற்ற பலன் சேர்க்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். குடும்ப சச்சரவு ஏற்படும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,4,6,9
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J




*(21 பக்கத் தொடர்ச்சி)*

கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளை நிறைவு செய்யாமல் பொருளாதாரத்தை முன்னெடுப்பது சிரமமானது. கடன் மறுசீரமைப்பு பேச்சுக்களின் இறுதிக்கட்டமே நாம் ஆட்சிக்கு வருகையில் காணப்பட்டது. அந்த முன்னெடுப்புகள் சாதகமானதா பாதகமானதா என தற்பொழுது விவாதிப்பதில் பயனில்லை. அது தான் யதார்த்தம். விரைவில் ஒவ்வொரு நாடுகளுடனும் தனித்தனியாக ஒப்பந்தங்களை மேற்கொள்ள இருக்கிறோம்.

வர்த்தகக் கடன் தொடர்பில் ஆரம்ப கட்ட உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. டிசம்பர் இறுதிக்குள் அந்த பணிகளை நிறைவு செய்ய முடியும் எனநம்புகிறோம். சர்வதேச நாணய நிதியத்துடனான கடன்மறுசீரமைப்பு தொடர்பான செயற்பாட்டை இவ்வருடத்திற்குள் வெற்றிகரமாக நிறைவுசெய்ய இயலுமாகும். பணியாளர் மட்ட உடன்பாடு இவ்வாரம் எட்டப்படுவதோடு பொருளாதாரத்தை நம்பகமான நிலைக்கு கட்டியெழுப்புவதற்கு பங்களிக்கும்.

நாம் கொள்கை ரீதியில் எமது பொருளாதாரம் எதிர்கொண்டுள்ள ஆழமான நெருக்கடிகளுக்கு இந்த நிகழ்ச்சிநிரல் மாத்திரம் போதுமானது என கருதவில்லை.எமது நிதித்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நிர்வகிப்பதற்கு இந்த செயற்பாடுகள் போதுமானதாக இருக்கும். ஆனால் எமது பொருளாதார முறைமை பாரிய சரிவை கண்டிருக்கிறது. எமது பொருளாதாரத்திற்கு பாரிய மூலோபாய எழுச்சி அவசியம். அதில் மூன்று அம்சங்கள் அடங்கும். எமது பொருள் சேவைகள் உற்பத்தித் துறையில் வேகமான முன்னேற்றம் அவசியம். பொருளாதார வளர்ச்சியில் அதிக பங்கை மேல் மாகாணம் வழங்குகிறது. அது போலவே ஏனைய பிரதேச மக்களின் பங்களிப்பும் அதற்கு அவசியப்படுகிறது. பொருட்கள் சேவைகள் உற்பத்தியில் வேகமான முன்னேற்றம் அவசியம். பொருளாதாரத்தில் மக்களின் பங்களிப்பும் அவசியம். மக்களை கைவிட்டுச் செய்யும் பொருளாதார அபிவிருத்தியில் பயனில்லை. மக்களை மனிதத் தூசிகளாக்கும் பொருளாதாரத்தில் பயனில்லை. அனைத்து பொருளாதார செயற்பாடுகளிலும் மக்களை பங்குதாரர்களாக்க வேண்டும். அனைத்து மக்களையும் பொருளாதாரத்தில் பங்குதாரர்களாக்காமல் அதன் நன்மை மக்களை சென்றடையாது. தேசிய நிதி சிறு குழுவின் கைகளில் மாத்திரம் இருக்குமானால் அது அரசாங்கத்திலோ பொருளாதாரத்திலோ ஸ்தீர நிலையை ஏற்படுத்தாது. இயற்கை வளங்கள் பொருளாதார உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. அனைவரும் இணைந்து பொருளாதாரத்தை கட்டியெழுப்புகையில் அது சிறு குழுவின் கரங்களுக்கு செல்லுமானால் பொருளாதாரப் பயணம் ஸ்தீரமடையாது. சமூகமும் வலுவடையாது. பொருளாதாரத்தின் பயன் நியாயமாக மக்களை சென்றடைய வேண்டும்.

சந்தையைக் கையாள்வது தொடர்பிலும் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எமது நாடு பாரிய சந்தையுள்ள இடமல்ல. சந்தையில் ஏகபோக உரிமை காணப்படுகிறது. நாளாந்த அரிசிப் பயன்பாடு 6500 மெற்றிக் தொன்களாகும். சிறிய சந்தைகளில் ஏகபோக உரிமை உருவாகலாம். பொருளாதார அடிப்படையில் எமது சந்தை நிர்ணயிக்கப்படவில்லை. ஏகபோக உரிமைப் படித்தான் எமது சந்தை நிர்ணயிக்கப்படுகிறது. பொருட்களின் விலைகளை ஏற்றி இறக்க அவர்களால் முடியும். நெல் விலையை கூட அவர்களால் நிர்ணயிக்க முடிகிறது. அரிசி விலையையும் அவர்களால் தீர்மானிக்க முடியும். இதனால் பொருட்கள் சேவைகளை பெற பாரிய கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மீளவும் சந்தையின் போக்கை மாற்றியமைக்க எதிர்பார்க்கிறோம். மக்களுக்கு நியாயமான முறையில் பொருட்கள் சேவைகளை வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அதனை அரசாங்கம் மீற முடியாது. போட்டித்தன்மை ஊடாக இதனை செய்ய முடியும். விலைகளை நிர்ணயிக்கலாம். ஆனாலும் சில துறைகளை மேற்பார்வை ஊடாக கையாளலாம். பாராளுமன்றத்தின் ஊடாக நிர்ணயச் சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சந்தைகளிலுள்ள திரிபுநிலையை சீர் செய்ய அவை போதுமானதா. அது தொடர்பான சட்டங்கள் போதுமானதா என பார்க்க வேண்டும். சில துறைகளை நாம் கையாள வேண்டும். சில துறைகள் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமானவை. அவை அரச பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும். வலுசக்தி சந்தையை கையாளுகையில் அரசின் பங்கும் இருக்க வேண்டும். அவை பொருளாதாரத்தில் முக்கியமானவை. இவற்றில் ஏற்படும் சில தடுமாற்றங்கள் பெரும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே அவ்வாறான துறைகளிலும் அரசாங்கத்தின் வகிபாகம் ஒன்று இருக்க வேண்டியதன் அவசியத்தை நாம் அறிந்துள்ளோம்.

அதே போன்று நிதித்துறை சுதந்திரமாக செயற்பட ஆரம்பித்தால் என்ன நடக்கும். மத்திய வங்கி மேற்பார்வை நிறுவனமாக செயற்படுகிறது. நிதிச் சந்தையிலும் அரச வகிபாகம் இருக்க வேண்டும்.

அடுத்து பரவலடைந்து காணப்படும் சந்தைகளுக்கு பதிலாக ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை அமைப்பை உருவாக்க வேண்டும். அதற்காக கூட்டுறவுச் அமைப்பை வலுவானதாக மாற்றியமைக்க எதிர்பார்க்கிறோம். சந்தையில் பலமான போட்டியாலராக கூட்டுறவுத்துறையை பயன்படுத்த இருக்கிறோம். பொருட்கள் மற்றும் சேவைகளை முன்னேற்றுவதற்காக சில துறைகளை அடையாளங் கண்டுள்ளோம். சுற்றுலாத் துறையில் பெரும் பாய்ச்சலை செய்யக்கூடிய இயலுமை தொடர்பில் அறிந்துள்ளோம். அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி 4 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளையும் 8 பில்லியன் டொலர் பெறுமதியான சுற்றுலா பொருளாதாரத்தை கட்டமைப்பதற்கும் எதிர்பார்த்திருக்கிறோம். 2018 இல் 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

அடுத்ததாக தகவல் தொடர்பாடல் துறை உலகின் அனைத்து தொழில் துறைகளிலும் தாக்கம் செலுத்துகிறது. தகவல் தொழில்நுட்பத்துறை வல்லுநர்கள் நாட்டுக்கு அவசியம். தற்போது எமது நாட்டில் 85 ஆயிரம் தகவல் தொழில்நுட்ப தொழில்துறையினர் மாத்திரமே உள்ளனர். அவர்களின் எண்ணிக்கையை 5 வருடங்களில் 2 இலட்சமாக அதிகரித்துக்கொள்ள எதிர்பார்க்கிறோம். தகவல் தொழில்நுட்பத்துறை ஏற்றுமதி வருமானம் குறைவாகவே உள்ளது. 5 பில்லியன் டொலர் வருமானத்தை பெறும் வகையில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஐந்து துறைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த திட்டமிட்டிருக்கிறோம். அதற்காக கல்வி, மொழி உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்துகிறோம்.

இன்றும் உலக துறைமுகங்களின் வரிசையில் கொழும்பு துறைமுகம் முன்னணி வகிக்கிறது. அமைவிடத்தின் வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பலமான வர்த்தக கப்பல்துறை மத்திய நிலையமாக அதனை மாற்ற வேண்டும். சேவைப் பெறுநர்களுக்கு உரிய வகையில் சேவை கிடைக்கிறதா என்ற கேள்வி உள்ளது. எமது துறைமுகங்களின் இயற்கை அமைவிடமே எமது வலுவாகும். அதனால் எமது துறைமுகத்தை வலுவான பொருளாதார மையமாக மாற்றியமைப்பதற்கான பாரிய திட்டம் உள்ளது.

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- COMMERCIAL
- INDUSTRIAL
- CONSTRUCTION
- VACANT LAND




## RESIDENTIAL- COMMERCIAL

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages






இவ்விடத்தில் விளம்பரம்

செய்ய எங்களுடன்

தொடர்பு கொள்ளவும்.

416 752 1524








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1494 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 22, 2024


## 'Centre for Youth Empowerment & Community Services' hosted Fundraising Dinner Gala in Scarborough

# ஸ்காபுறோவில் இயங்கிவரும் 'Centre for Youth Empowerment & Community Services' நடத்திய இராப்போசன விருந்து



கடந்த நான்கு வருடங்களாக ஸ்காபுறோவில் செயற்பாட்டு அலுவலகத்தைக் கொண்டு இயங்கிவரும் **'Centre for Youth Empowerment & Community Services'** நடத்திய இராப்போசன விருந்து கடந்த 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோவில் உள்ள பாபா பேங்குவற் மண்டபத்தில் நடைபெற்றது.
சிறப்பு விருந்தினர்களாக ஒன்றாரியோ மாகாண அமைச்சரும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினருமான அவர்களும் மத்திய பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்காபுறோ வடக்கு பாராளுமன்ற உறுப்பினருமான அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.விழா நிகழ்ச்சிகளை மதிசயன் அவர்களும் செல்வி ஹம்சாயினி சாந்தகுமார் அவர்களும் தொகுத்து வழங்கினார்கள்

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# ஸ்காபுறோ "நாத வீணா மன்றத்தின் 2024ம் ஆண்டின் "இசை விழா" சிறப்பாக நடைபெற்றது



கனடா - ஸ்காபுறோ நகரில் இசை ஆசிரியை ஸ்ரீமதி குகணேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களை குருவாகக் கொண்டு இயங்கிவரும் "நாத வீணா மன்றத்தின் 2024ம் ஆண்டின் "இசை விழா" சிறப்பாக கடந்த சனிக்கிழமை 16ம் திகதி மாலை இசைக் கலா மன்றத்தின் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.
விழாவின் தொகுப்பாளராக திருமதி கோதை அமுதன் சிறப்பாக பணியாற்றினார். விழாவின் பிரதம விருந்திதராக உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்து இசை நிறுவனத்தையும் குருவையும் மாணவ மாணவிகளையும் வாழ்த்திச் சென்றார்.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

## 'Heritage Beyond Boarders', a Multicultural Organization in Toronto, honored and celebrated two Tamil Canadians

# ரொறன்ரோ 'Heritage Beyond Boarders' பல்கலாச்சார நிறுவனம் இரண்டு தமிழ் கனேடியர்களை விருதுகள் வழங்கிக் கௌரவித்தது



ரொறன்ரோவில் நீண்டகாலமாக இயங்கிவரும் **'Heritage Beyond Boarders'** என்னும் பல்கலாச்சார நிறுவனம் கடந்த சனிக்கிழமையன்று 16ம் திகதி இரண்டு தமிழ் கனேடியர்களை சிறப்பு விருதுகள் வழங்கிக் கௌரவித்தது. திரு கனேந்திரன் செல்வராஜா (**Entrepreneur and CEO of BEHIND ME MEDIA GROUP**) மற்றும் ராம்சங்கர் சிவநாதன் (**President of Roobam Radio and Publisher of 'Thesam' Monthly Newspaper**) ஆகிய இருவருமே மேற்படி சிறப்பு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற இருவராவர்.

# பிரம்ரன் மாநகரில் புதியதோர் நம்மவர் உணவகம் "நம்ம கடை பிரியாணி"

## நகரபிதா பெற்றிக் பிறவுண் அவர்களின் கரங்களால் நாடா வெட்டப்பெற்று திறந்து வைக்கப்பெற்றது



தமிழ் மக்களும் இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட பல்லின மக்களும் அதிகளவில் வாழும் பிரம்ரன் மாநகரில் புதியதோர் நம்மவர் உணவகம் "நம்ம கடை பிரியாணி". என்னும் பெயரில் திறந்து வைக்கப்பெற்றுள்ள உணவகத்தின் பங்காளர்களின் அழைப்பிற்கு ஏற்ப பிரம்ரன் நகரபிதா பெற்றிக் பிறவுண் அவர்களின் கரங்களால் நாடா வெட்டப்பெற்று 20-11-2024 புதன்கிழமையன்று திறந்து வைக்கப்பெற்றது.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# வடக்கு தமிழ் தேசியம் "திசை"மாறியதா...?

சிங்களக் கட்சியான தேசிய மக்கள் சக்தி வடக்கில் 5 பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றி பெரும்பான்மை பெற்றுள்ளதனால் வடக்கில் தமிழ் தேசியம் மரணித்து விட்டதாகவும், திசைமாறி விட்டதாகவும் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களில் உண்மையுள்ளதா? தமிழ் மக்கள் தமிழ்தேசியக்கட்சிகளை புறக்கணித்து விட்டனரா ?தேசிய மக்கள் சக்திக்கு சென்ற வாக்குகள் யாருடையவை? வடக்கில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றது எவ்வாறு?

-கே.பாலா.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)